★ பக்தவத்சலத்தின் பதவிப் பல்லவி! ★

Phone No. 4502
விலை அணா ஒன்று

Regd. No. M. 5458
[இலங்கை 10 சதம்

மாலை மணி

ஆசிரியர்: C.N. அண்ணாதுரை M.A.   MALAIMANI

(திராவிடர் தமிழ்த் தினசரி - கருத்திதழ்)

மலர் 1 | சென்னை (9—11—49) | வெளியீடு (10—11—49) | இதழ் 86

மக்களாட்சிக்கு மாற்றுக் கட்சி கூடாதாம்!

பொறுத்திருந்தால் புதுமை புரிவார்களாம்!

காந்தி ராஜ்யத்திற்கும் கருத்துரைக்கும் பெரும் பகையா?

"இன்று இருக்கும் பல கட்சிகளும் சீக்கிரத்தில் இருக்குமிடம் தெரியாமல் போய் காங்கிரஸ் கட்சியைத் தவிர வேறு கட்சி இந்த நாட்டில் இருப்பதற்கு இடமில்லாது போய்விடும். எவ்வளவோ கஷ்டங்களுக்கு இடையே காங்கிரஸ் சர்க்கார் இந்திய மக்களுக்கு உண்மையோடு பாடுபட்டு வருகிறது. ஆகையால் மக்கள், சர்க்காருடன் சேர்ந்து உழைத்தால் காந்திஜி கண்ட சுபீட்ச இந்தியாவை சில ஆண்டுகளுக்குள் நாம் காணலாம்."

—மந்திரி பக்தவத்சலம்—

இன்று, இத்துணைக் கண்டத்திலுள்ள பல சிக்கலான பிரச்சினைகளில் முதன்மையானது, காங்கிரஸ் ஆளவந்தார்களுக்கு என்றைக்குப் பிரிவு உபசாரம் படித்துக் கொடுப்பது என்பதுதான். அவர்கள் ஆட்சியில் மக்கள் அடைந்துள்ளது மீள மார்க்கமில்லாத வறுமை—வேலையின்மை—பஞ்சம்—பட்டினி இது நமது குற்றச்சாட்டு மட்டும் அன்று. காங்கிரஸ் அமைச்சர்கள்கூட, நாட்டு மக்கள் அன்று அனுபவித்து வரும் கஷ்டங்களைக் குறித்து, பல முறை, பலப்பல சந்தர்ப்பங்களில் இவ்வாறு பேசி வந்திருக்கிறார்கள். மக்கள் மானம் காக்கத் துணிக்குத் தட்டு ஏற்படுகிறது என்றால், 'இந்த நிலை தற்காலிகமானது' தான் என்று கூறாத காங்கிரஸ் கருணாமூர்த்திகள் கிடையாது! உயிரோடு இருக்கப் போதிய உணவு கிடைக்கவில்லையே என்றால், 'இதுவும் தற்காலிகமானதே' தான் என்றே சாத தேச பக்தர்கள் கிடையாது. "கை நெசவு காடேகிறதே—நெசவாளிகள் கல்லறை நாடுகிறார்களே" என்ற கூக்குரல் கிளம்பினால், வெகு பொறுமையோடு, 'பொறுத்திருக, பிணி நீங்கும் சில நாள் கழித்து' என்று உபதேசகாண்டம் காட்டும் காங்கிரஸ் சனங்களுக்கோ குறைவில்லை! 'சர்க்கரை கிடைக்கவில்லையே' என்று கதறினால், 'பிரசட் சியினா பேச்சைக் கேட்டு, அவர்கள் சொல்லிலே சொக்கிவிடாதீர்! இந்த நெருக்கடி தற்காலிகமானதுதான்' என்று சாகசம் பேசுகிறார்கள் காங்கிரஸ் கண்ணியவான்கள்!

'வேலையில்லை—வீடில்லை—வாழ வழியில்லை'—என்ற சொற்கள் ஈட்டி போல பாய்ந்து வந்தாலும், எரிமலை போல் நெருப்பை உமிழ்ந்தாலும், நமது நாடு எடுப்பார் அமைச்சர் எனும்,'எங்கள் வாழ்வு இன்னும் பத்து ஆண்டுகளுக்கு நிரந்தரமாக இருக்கத்தான் [illegible]! இதை அசைக்க இந்த நாட்டில் ஆளேது, [illegible] ஆற்றலேது?" என்று எக்காளம் இடுகிறார்கள்!

"இத்துணைக் கண்டத்தின விடுதலைக்காகப் பாடுபட்டோம்; ஏகாதிபத்தியத்தால் இடிபட்டோம், அடிபட்டோம்—அருஞ்சிறையில் அவதிப்பட்டோம்—அல்லலுற்றோம்—ஆளவந்தார்களாக அமர்ந்துவிட்டோம்" என்று பேசி வந்த பெருமைதான, இவர்களை இன்றும் பொது மக்கள் கோபத்திலிருந்து காப்பாற்றி வருகிறது. இவர்களால் இழைக்கப்படும் கேடுகளால், இந்தப் பெருமைப் பேச்சின் கம்பீரம் கொஞ்சங் கொஞ்சமாகக் குறைந்து வருகிறது. ஆளவந்தார்கள் பேசி வரும் அன்றாடப் பேச்சுகளை ஆராய்ந்து பார்ப்பவர்களுக்கு இதன் உண்மை புரியாமல் இருக்க நியாயமில்லை.

நாட்டிலே காங்கிரசுக்கு எதிராக அரசியல் கட்சிகள் உண்டு என்பதைக்கூட காங்கிரஸ் கட்சியினர் இதுவரை விவாத அளவிற்குக்கூட ஏற்றுக்கொண்டது கிடையாது ஆனால் அவர்கள் பதவிக்கு வந்த பின்னர், போகிற இடங்களிலெல்லாம், பொதுக் கூட்டங்களில் கூறி வருவது என்ன? பொதுக் கூட்டங்களில் பேசி வருவது ஒரு பக்கம் இருக்க, காங்கிரஸ் ஊழியர்களிடம் உற்சாக மூட்ட உணர்ச்சி வருவது என்ன?

"நம்மை எதிர்க்க நாட்டிலே கட்சிகள் உண்டு. கம்யூனிஸ்டு கட்சி—சோஷலிஸ்டு கட்சி—திராவிடர் இயக்கம் போன்ற கட்சிகள் இருக்கின்றன. கம்யூனிஸ்டுகளை காலிகள் என்று கூறி, அவர்களையெல்லாம் சிறையில் அடைத்துவிட்டோம். கட்சியையே சட்டவிரோதமானதாக்கி விட்டோம். சோஷலிஸ்டுகளுக்கு [illegible] இல்லை. திராவிட இயக்கத்தினர் [illegible] பாரீர். [illegible] எங்களையே [illegible] நாங்கள் தியாகிகள்! என்றல்லவோ பேச வேண்டிய நிலைமை [illegible] ஆளவந்தார்களுக்கு! [illegible] இது? [illegible]

[தொடர்ச்சி 5-ம் பக்கம் பார்க்க]

சென்னை அரசாங்கத்தின் செல்வநிலை

திருப்திகரமாயிருக்கிறது ஆனால் வளர்ச்சித் திட்டத்துக்குப் பணமில்லை

நிதியமைச்சர் கூறுகிறார்

எந்தத் திட்டத்தைக் கூறினாலும் எதற்கேட்டாலும் "பணமில்லை" என்ற ஒரே வார்த்தையில் பதில் கூறிவிடுகிற சித்து சாகசமாக அமைச்சர்களுக்கு வழக்கமாகிவிட்டது. எவ்வளவுதான் முக்கியமான கோரிக்கையாக இருந்தபோதிலும், அரசாங்கத்திடம் பணமில்லை என்பதில் கூறிவருகின்றனர் அமைச்சர்கள்.

எனவே, அரசாங்கத்திடம் எதற்குமே பணமில்லைபோலும், நமக்கு இடம் வாராதும் ஏராளமான வரிப் பணம் என்ன ஆகிறதென்றும் சந்தேகம் பொதுமக்களுக்கு எழுந்தது. இந்த ஐயத்தைப் போக்க நிதி அமைச்சர் ரேடியோவில் பேசுகையில், சென்னை அரசாங்கத்தின் செல்வநிலைமை திருப்திகரமாயிருக்கிறதென்று உறுதி கூறினர்.

வெள்ளையர்கள் விட்டுப்போன ஆண்டில் 47·99 கோடியாக இருந்த சென்னை மாகாணத்தின் மொத்த வருமானம் இப்போது 53·25 கோடியாக உயர்ந்துள்ளதென்றும், வெள்ளையர்கள் விட்ட ஆண்டில் 16·60 கோடி ரூபாய் கலால் வருமானமாக இருந்தது. மதுவிலக்கால் 18 கோடி ரூபாய் போய்விட்டதெனினும், விற்பனை வியாபார வரிகள் மூலம் 13·03 கோடி ரூபாய் வருமானம் வருகிறதென்றும். மத்திய அரசாங்கத்திடமிருந்து 8·42 கோடி ரூபாய் வருமான வரியில் சென்னையின் பங்காக வந்திருக்கிறதென்றும் கூறினார்.

ஆனால் பணமில்லை தேவை என் தெல்லாம் கூறப்படுவதற்குக் காரணம் வெள்ளையர் ஆட்சியிலிருந்த போலீஸ் செலவு 2·98 கோடியாக இருந்தது சுதந்திர ஆட்சியில் 6·52 கோடி ரூபாயாக உயர்ந்தது. முன்னர் 30·67 கோடியாக இருந்த செலவினங்களின் மொத்தச் செலவு, இப்போது 52·73 கோடியாக உயர்ந்தது. 1946 மார்ச்சு முடிய 16·06 கோடி ரூபாய் கடனிருந்தது இப்போது 27·87 கோடி ரூபாய் கடனாக இருக்கிறது. இதில் பாதி ஸ்தல ஸ்தாபனங்களுக்குக் கடன் தரப்பட்டிருக்கிறது. கடன்கள் போக, நாட்டின் சொத்து 18 கோடியிருக்கும்.

இப்போது முதலீட்டுச் செலவுகள் கடன்கள் மூலம் வரவிருக்கிறதாக 11 கோடி ரூபாய் தேவை. இந்திய அரசாங்கத்திடம் கேட்ட 6 கோடி ரூபாய் கடனைக் கொடுக்க முடியாதென்று கூறியதுடன், அடுத்த ஆண்டும் முடியாதென்று கூறிவிட்டது. அதாவது 2 ஆண்டுகள் வரை மத்திய அரசாங்கத்திடம் பணம் எதிர்பார்க்க முடியாது. அபிவிருத்தித் திட்டமானியம் இவ்வாண்டு ஒரு கோடியாகக் குறைக்கப்பட்டு, அடுத்த ஆண்டு அதுவுமில்லையென்று மத்திய அரசாங்கம் தெரிவித்துவிட்டது.

இப்போது அரைகுறையாக விடப்பட்டுள்ள வேலைகளை முடிக்க 50 கோடி ரூபாய் தேவை. நீர்ப்பாசனத்திற்கு 22 கோடி ரூபாய் தேவை. மின்சாரத்திட்டத்திற்கு 20 கோடி ரூபாய். ரோடு கட்டடங்களுக்கு 1½ கோடி ரூபாய் ஜமீன்தார் நஷ்டஈட்டிற்கு 17 கோடி ரூபாய் ஆக மொத்தம், 110½ கோடி ரூபாய் இப்போது சென்னை அரசாங்கத்துக்குத் தேவை. மத்திய அரசாங்கம் கொடுத்து உதவாது, முதலாளிகளோ நியாயமான வட்டிக்கு மீது அரசாங்கத்துக்குக் கடன் கொடுத்து உதவ முன்வராவிடில் அப்போது எவ்வளவு பெருந்தாலும் பொது மக்களே பண உதவி செய்ய வேண்டுமென்று கோருகிறார் நிதியமைச்சர்.

முதலாளிகளிடம் வாங்கவோ, மத்திய அரசாங்கம் ஏராளமான தொகைகளை உலக பாங்கியிலிருந்து கடனாக வாங்கியிருப்பதால், அதிலிருந்து முதலீட்டு செலவினங்களுக்கும் பணம் தருமாறு வற்புறுத்தவோ, அமைச்சர்கள் ஏன் முன் வரக் கூடாது? ஏன் துணியக்கூடாது. முதலாளிகள் தர முடியாதென்றால் ஆமாம் சாமி போடுவது, மத்திய சர்க்கார் முடியாதென்றால் ஆமாம் சாமி போடுவது தானா அமைச்சர்களுடைய வேலை. தங்களுடைய கணக்கைக் காட்டும் சங்கடமான நிலையும் தமக்குத் தெரியுமென அமைச்சர் கூறுவாரானால், முதலாளிகளுக்கும் மத்திய அரசாங்கத்துக்குமே சங்கடமான நிலை என்றால், ஏழை மக்களின் நிலை என்னவாயிருக்கும்? முன்னரே கேட்க மாட்டாத பல வரிகளையும், பெருகும் மேலும் பல புதிய வரிகளையும்,

[தொடர்ச்சி 5-ம் பக்கம் பார்க்க]

இப்பொழுதன்றோ புரிகிறது!

ஆனால் ஒரு ஐயம்!

மதச்சார்பற்ற (செகுலர்) சர்க்கார் என்பதற்குப் பொருள் தெரியாது மயங்கிக்கொண்டிருந்த இந்நாட்டு மக்களுக்குத் 'தெப்பபோல பருந்து காவில் சிக்கியது' போன்று சென்னை உயர்நீதி மன்ற முன்னாள் நீதிபதி தோழர் என். சந்திரசேகர அய்யர் அருமையான விளக்கம் தந்துவிட்டார். இனிக் கவலையில்லை. வேலை நாட்டு 'அரசியல் அமைப்பாளருக்கும்கூட அய்யர் தந்திருக்கும் அரிய விளக்கத்தைத் தந்தி எழுதியனுப்பி வைத்துவிடலாம்.

சென்னையில் வார நிதமொன்றின் துவக்க விழாவில் சொற்பொழிவாற்றியிருக்கும் தோழர் சந்திரசேகர அய்யர், "மதச்சார்பற்ற சர்க்கார் என்றால் மதத்திடம் எமக்கு ஒன்றும் வேலையில்லையென்றோ, அதற்கும் எமக்கும் தொடர்பு இல்லையென்றோ அர்த்தமில்லை. மாறாக, சரியான மனோவுணர்வு நம் வாழ்வுக்கு ஜீவனளிக்க கூடியதாக வேண்டும். இந்த தாமமும் இந்து கலாசார முறையில் பாதுகாக்கப் பட வேண்டும்" என்று குறிப்பிட்டுள்ளார்.

மதச்சார்பற்ற சர்க்காரில் மதம் இடம் பெற வேண்டிய அவசியத்தையும், அது மக்களுக்கு [illegible] தர வேண்டிய இறைமையை [illegible], அதன் கோவையைக் கோடிட்டுக்காட்டி, வேத சாஸ்திரங்களின் போற்றிப் பாதுகாக்கப்பட்டு வர வேண்டிய முக்கியத்துவத்தையும் தெளிவாகக் கூறியுள்ளார் முன்னாள் நீதிபதி. மதச்சார்பற்ற சர்க்காரின் பொருள் இதுவாக இருப்பதால்தான் நம் சென்னை சர்க்காரும் தங்களை மதச்சார்பற்றோர் என்று கூறிக்கொண்டு, அமாவாசை, கார்த்திகை, சூரிய சந்திர கிரகணங்கள், தீபாவளி, ராமநவமி கோகுலாஷ்டமி போன்ற மதச்சார்புடைய பண்டிகைகளுக்கெல்லாம் பொது விடுமுறை விடுகிறார்கள் போலும். இக்கருத்தினால் தான் இந்திய சர்க்காரும் அரசாங்க சக்கரத்தையும் அதுப்பையும் தாங்கள் அடையாளமாக வைத்துக் கொண்டதோடு, திரிமூர்த்தி, நடராஜர், கயா கோவில் புவனேஸ்வரர் ஆகிய உருவங்களை தம் புதிய தபால் தலைகளில் பொறித்து வெளியிட்டனர் போலும்! முன்னாள் நீதிபதியின் விளக்கத்துக்குப் பிறகல்லவா நமக்குப் புரிகிறது. ஆனால் ஒரே ஒரு ஐயப்பாடு!

மதச்சார்பற்ற சர்க்காரின் பண்பிலேயே இவையெல்லாம், மதசார்புடைய சர்க்காரொன்றின் பண்பாடுகள் [illegible] [illegible] என்பது நமக்குப் புரியாததாகவே இருக்கிறது. முன்னாள் நீதிபதி அவர்களே சந்தர்ப்பம் தந்தால் விளக்குவாரென எதிர்பார்க்கிறோம்.

மாலை மணி

சென்னை 9—11—49 புதன்கிழமை

நீதிக்கு அடைக்குந் தாழ்ப்பாள்!

“சுதந்திர சூரியன் இந்த நாட்டில் முழு ஒளியோடு கூடி விளங்கும்படி விடுங்கள்”

என்று, வைதிக புரியினர்க்கு வக்காலத்து வாங்கி வாதிடும் வழக்கத்தைப் பரம்பரைப் பண்பாகக் கொண்டிருக்கும் தோழர் எஸ். வரதாச்சாரியாரே, சட்டம் வகுப்போர் கூடியிருக்கும் சட்ட மன்றத்தில், ஏங்கிக் கூறுகிறுரென்ருல், ‘காருண்ய’மிகுந்த காங்கிரஸ் அரசாங்கத்தில், சுதந்திர ஒளிவீசும் சூரியன், எப்படிப்பட்ட உரிமை பறிக்தும் காரிருளால் மூடப்பட்டிருக்கிருன் என்பது தெள்ளத் தெளிய அறியலாம்.

சுதந்திர சூரியன் காரிருளால் மறைக்கப்பட்டிருப்பதும், அது ஒளி வீசும் நிலைபெறவேண்டும் என்பதும் தோழர் வரதாச்சாரியார் போன்ருரின் கண்களில் பட ஆரம்பித்திருப்பது ஆச்சரியப்படுதற்குரியதுதான்.

பொது அமைதிப் பாதுகாப்பு மசோதாவை நிறைவேற்ற வேண்டி, சட்ட மந்திரி மாதவ மேனனுர், சென்னை சட்டசபையில் கொண்டுவந்தபோது, அது பற்றிய தம் கருத்தை வெளியிடும்போது தான், தோழர் வரதாச்சாரி மேற் கூறியவாறு மொழிந்துள்ளார். இப்பொழுது சட்ட மன்றத்தின் முன் கொண்டு வரப்பட்டிருக்கும் பொது அமைதிப் பாதுகாப்பு மசோதா, மக்கள் உரிமை முழுவதையும் முறையல்லாத முறையில் பறித்துச் செல்வதாக இருப்பதால், இத்தகைய கொடிய மசோதா அவசியமற்றது என்பதைத் தோழர் வாதாச்சாரியாரும், அவர் கூட்டாளி தோழர் வைத்தியனுத அய்யரும் வற்புறுத்தியிருப்பது அத்திப்பூத்தது போலவும், கார்த்திகைத் திங்களில் பிறைச் சந்திரன் காணப்படுவது போலவும் இருக்கிறது. அத்தகையோரே இப்படிப்பட்ட மசோதாவை எதிர்க்கும்படி நேர்ந்திருக்கிறது என்பதை அறியும் போது, மசோதா எத்துணை அளவு கொடுமையை உமிழ்ந்து கொண்டிருக்க வேண்டும் என்பதை உன்னிப் பாருங்கள்!

1947-ம் ஆண்டில் நிறைவேற்றப்பட்ட பொது அமைதிப் பாதுகாப்புச் சட்டம், தன் கால அளவை இழந்துவிட்டது என்பது மட்டுமல்லாமல், தன்னகத்தே சில ஓட்டைகளையும் கொண்டிருந்து விட்டதாம்! அந்த ஓட்டைகளை அடைத்துச் சட்டத்தைப் புதுப்பிக்கவே, பொது அமைதிப் பாதுகாப்பு மசோதா (1949) கொண்டுவரப்படுவதாக மந்திரி மாதவமேனனின் கூற்று தெளிவுபடுத்துகிறது.

மற்ற சட்டங்களின் கீழ் ஒருவன் மீது நடவடிக்கைகள் எடுப்பதானல், அவைகளுக்கெல்லாம் காரணங்கள் சொல்லி அவன் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும். காரணங் காட்டாமலே சந்தேகப்பட்டவர்கள் மீது நடவடிக்கை எடுத்து, அவர்களை எத்துணைக் காலம் வேண்டுமானுலும் பாதுகாப்பிலேயே வைத்திருக்க வேண்டிதான் 1947-ல் அவசரச் சட்டம் நிறைவேற்றப்பட்டது. அந்தச் சட்டத்தின் கீழும் ஒரு சிலர் நீதிமன்றம் ஏறி, நீதி பெற்று வெளியேற வசதி ஏற்பட்டதைக் கண்ட ‘காருண்ய’ காங்கிரஸ் அரசாங்கம், அப்படிப்பட்ட நீதியையும் பெறவொட்டாமல் தடுக்க இப்பொழுது பொது அமைதிப் பாதுகாப்பு மசோதா கொண்டு வந்திருக்கிறது. நீதிமன்றத்தின் நெடியவாயில்கள் அடைக்கப்பட்டுவிடும்; அடக்குமுறை அதிகாரம் எந்த அளவுக்கு வேண்டுமானுலும் அட்டகாசம் புரியலாம்; அதற்காகவே இந்தப் புதிய மசோதா!

பலாத்காரம் புரிந்ததாகவோ அல்லது பலாத்காரம் புரியும்படி மக்களைத் தூண்டியதாகவோ பட்டவர்த்தனமாகக் காட்டக்கூடிய குற்றச்சாட்டுகளை எல்லா சமயங்களிலும் சிலரைப் பொறுத்துச் சுட்டிக்காட்ட முடியவில்லையாம். அந்தச் சிலரைப் பாதுகாப்பில் வைக்கவே இந்த மசோதாவாம்!

எவ்வளவு விசித்திரமான வாதம்! ‘காந்தீய வழி’யைப் பின்பற்றும் அரசியலாரிடத்து தான் காணப்படுகின்றது. ஒருவனைச் சுட்டிக்காட்டி இவன் இன்னின்ன குற்றங்கள் செய்தான் என்று குறித்துக் காட்ட முடியாதாம், ஆனல் அவனைப் பாதுகாப்பிலேயே வைப்பார்களாம்; அதற்காகவே இந்த மசோதாவாம்! நீதியும் நேர்மையும் எவ்வளவு ‘அழகாக’க் காங்கிரஸ் ஆட்சியில் தாண்டவமாடுகின்றன பாருங்கள்!

காரணங்காட்டாமல், தங்களுக்குச் சந்தேகமாகப் படுகிறவர்களைப் பாதுகாப்புக் கைதிகளாக்கி, அவர்களை எவ்வளவு காலம் வேண்டுமானுலும் பாதுகாப்பிலேயே வைப்பதற்கு, ஒரு சட்டம் நிறைவேற்றி அதைப் போலீஸ் அதிகாரிகள் கையில் கொடுப்பதென்ருல், அது துஷ்பிரயோகம் செய்யப்படமாட்டாது என்பதற்கு என்ன தகுந்த ஆதாரம் இருக்கிறது? ஒரு கட்சி அரசாங்கம் ஆளுகிறது. அதற்கு மாறுபட்ட கட்சிக்காரர்கள் அனைவரையும் அடக்கி ஒடுக்கத்தானே இத்தகைய சட்டம், ஒரு கட்சி அரசாங்கத்தால் நிறைவேற்றப்படுகிறது! நீதியின் கண்ணும் காதும் இம்மசோதாவால் அடைக்கப்பட்டு விட்டனவே! நாகரிகத்திற்கு அடுக்குமா இந்தச் செயல் என்ருலும் செய்கிறதே காங்கிரஸ் அரசாங்கம்.

காங்கிரஸ், எந்த அவசரச் சட்டங்கள் நாட்டைவிட்டு ஒழிக்கப்படவேண்டும் என்று இரந்த காலங்களில் கர்ஜனை புரிந்துவந்ததோ, அந்த அவசரச் சட்டங்களையும் அதற்கும் கடுமையான சட்டங்களையும் இப்பொழுது நிறைவேற்றி, ஆட்சி புரிந்துவருகிறது. இந்தக் கருத்தைத் தோழர் வைத்தியனுத அய்யரே குறிப்பிட்டுக் காட்டுகிருர், சட்டமன்றத்தில். மேலும் அவா கூறியுள்ளார்,

“ஆக்கத்திற்கான திட்டங்களும் வாழ்வுக்கான திட்டங்களும் அடுத்தடுத்து நிறைவேற்றப்படாமல் இப்பொழுது நம் முன் இருப்பதுபோன்ற அடக்குமுறைச் சட்டத்தை மட்டும் கைக்கொள்ளுவது ஒரு நலனையும் உண்டாக்கி விடாது. துப்பாக்கிக்குண்டுகள் எந்த இயக்கத்தையும் அழித்தது கிடையாது; அவைகள் காங்கிரஸ் இயக்கத்தையும் அழித்துவிடவில்லை

என்று, தோழர் வைத்தியனுத அய்யர் அழகாகவும், அறிவுடைமையோடும், ஆணித்தரமாகவும் குறிப்பிடுவது பாராட்டத் தகுந்ததேயாகும்.

குண்டுகள் எந்த இயக்கத்தையும் அழித்துவிடமுடியாது. ஆக்க வேலை, வாழ்வுக்கான வேலை எதுவும் செய்யாமல் அடக்குமுறைத் திட்டத்தைக் கொண்டு எந்த நலனையும் உண்டாக்க முடியாது இந்தச் சொற்ருெடர்களை ஆளவந்தார்களின் கண்கள் சற்றுக் கூர்ந்து கவனித்துக் கருத்துத் தெளிவு பெறட்டும்! ஆனல் மாதவமேனனுர் கொண்டு வந்திருக்கும் மசோதா குண்டுகளையும், அடக்குமுறைத் திட்டத்தையுமே நம்பிவாழுகிறது எவ்வளவு காலம் வாழும்?

நாட்டிலுள்ள குழப்ப நிலைகளுக்குள்ள அடிப்படைக் காரணத்தை அறிந்து, அறிவுடைமையால் அவற்றைக் களைவதே நேர்மை அரசாங்கத்தின் கடமையாகும் என்று நாம் அடிக்கடி வற்புறுத்தி வருகிறும், அடக்குமுறையினுல் குழப்ப நிலையைப் போக்க முயற்சிப்பது, அழிவுப் பாதையில் கொண்டு போய்ச் சேர்க்குமே ஒழிய, ஆக்கத்திற்கான வழியில் கொண்டுபோய் விடாது.

குழப்பங்களுக்கு அடிப்படைக் காரணங்கள் என்ன என்பதை அறிய வேண்டும் என்ற கருத்தைத் தோழர் வரதாச்சாரியார் இனிது எடுத்துக் கூறுகிருர்.

“வேலையில்லாத் திண்டாட்டம் பட்டினி, வறுமை நாட்டிலிருப்பதும், அவைகள் பொருட்டு உதவி செய்ய நாம் திறமையற்று இருப்பதும், ஆகிய இவைகளே நாட்டிலேற்படும் வருந்தக்கூடிய நிலைகளுக்குக் காரணமாக இருக்கின்றன”

என்று.

மேலும் அவர் கூறும்போது, “பலாத்காரத்தை அரசாங்கத்திற்கு மாருகத் திரட்டாதவரையில், சிறிய செய்தித்தாள்களைப் பற்றி நடவடிக்கை எடுத்துக் கொள்ளக்கூடாது” என்றும் குறிப்பிட்டுள்ளார்.

நாம் கூறினுல் தான் இந்த அரசாங்கத்தின் செவிகளில் ஏறுவதில்லையே, வைதிக பரம்பரையைச் சேர்ந்த தோழர்கள் வரதாச்சாரி, வைத்தியனுத அய்யர் போன்ருரது சொற்களாவது ஏருதா என்ற காரணத்தாலேயே தான், அவர்களுடைய கூற்றுகளை அரசாங்கத்திற்குக் காணிக்கை ஆக்குகிறேம்.

இந்தப் புதிய மசோதாவால் அடக்குமுறை தாராளமாக அவிழ்த்து விடப்படுகிறது! **நீதிக்கு வாய் அடைக்குந் தாழ்ப்பாள் போடப்படுகிறது!**

உலக்கூடம்

[‘சம்மட்டி’]

காட்சி கண் காட்சியே! சுயாட்சியின் மாட்சியே!!

இப்படிப் பாடிக்கொண்டே வந்தான் வழக்கத்துக்கு விரோதமாக, பிச்சைக்காரப் பெரியாண்டி!

‘ என்னடா பெரியாண்டி! பாட்டுப் புதிய பாதையிலே திரும்பிட்டுது” என்றேன் நான்.

“என்னுங்க ஐயா! எந்த உலகத்திலே இருக்கிறிங்க நீங்க?” என்று கொஞ்சம் பதட்டமாகக் கேட்டுவிட்டான் அவன்.

எனக்குக் கொஞ்சம் கோபந்தான், அந்தப் பிச்சைக்கார வாண்டுவிடம். என்ன செய்வது? அடித்தால் திருப்பியா அடிக்கப் போகிருன்? ஆளவந்தார்களின் அடக்குமுறைகளுக்கு ஆளாகி அவதிப்படுகிறவர்கள் போலத்தானே, எனது கோபத்துக்கு உள்ளானுலும் அவதிப்படப் போகிருன் அவன்! அவனுடைய பார்வை, எனக்கு. அவன் கேள்வியால் எழுந்தக் கோபத்தைத் தணியச் செய்துவிட்டது. அவனைப் பார்த்தேன் ஒரு தினுசாக!

“என்னங்க ஐயா! என் மேலே கோபங்களா?” என்று கேட்டான் பெரியாண்டி.

“நான் என்னடா மந்திரியாகவா ஆயிட்டேன்? காங்கிரஸ் எம். எல். ஏ. வா ஆயிட்டேன்” என்றேன் நான்.

“நீங்க எங்க சாமி! நீங்கதான் சாமி இல்லே பூதமில்லேண்ணு எல்லாம் பேசிகிட்டு கிடங்கிறீங்களே!” என்ருன் அவன்.

“அதெல்லாம் கிடக்கட்டுண்டா கந்தா, கடம்பா, முருகாண்ணுல்லாம் பாடிக்கிட்டு இருந்தயே இண்ணக்கி என்னடா புதிசா ‘சுயாட்சி’யெ பத்தியெல்லாம் பாடத் தொடங்கிட்ட?” என்றேன் நான்.

“ எங்கெ எம்பொழப்புக்கு ஆபத்து வந்துடு தோண்ணு பயமா கீதுங்க!” என்ருன்.

‘என்னடா இது வேடிக்கையா இருக்கு! பிச்சைக்காரன் பொழப்புக்குக் கூடவாடா ஆபத்து வந்துடும்?”

“ ஏன்சாமி வராது? ‘ கந்தா கடம்பாணு’ அதுக்கு முன்னெ யெல்லாம் பாடினு, ஒவ்வொரு வீட்டிலும் கொஞ்சம் சோறு போடுவாங்க,! இப்ப, அந்தப் பாட்டை பாடினுலே ஆளுக்கு ஆளு சண்டக்கி வராங்க!”

‘ ஏண்டா அது? விபரீதமா பேசறியே!”

“ விபரீதம் ஒண்ணுமில்லே சாமி! ‘எந்த முருவண்டா இப்பச் சோறு போடுருன்? நம்ம காசையும் வாங்கிக்கிட்டு, அரை வயிறுக்குக்கூட காணுமே, நம்ம சர்க்காரானல்லவோடா அரிசியெ அளந்தளந்து கொடுக்கிருன் !’ எண்ணு படிக்கத் தெரியாத கெழங்கள்ளாம்கூட கேக்க ஆரம்பிச்சுட்டதுங்க சாமி!”

“அதுக்கும், நீ பாடற பாட்டே மாத்திக் கிட்டதுக்கும் என்னடா சம்மந்தம்?”

“ஏன் சாமி சம்மந்த மில்லெங்கிறீங்க! கெழங்கள்கூட, சர்க்காரன்களே கேலி பேச ஆரம்பிச்சுட்ட போது, அவங்களுக்குப் பிடிக்கிற மாதிரி நானும் பாடுனுதானே ஒரு உண்ட சோருவது போட்டுத் தொலேவாங்க! இதெல்லாம் எங்க தொழில் தந்திரம் சாமி தந்திரம்!”

“அது சரிடா! சர்க்காரெ கேலியாப் பாடினு, உன்னெ போலீசான் பிடிச்சி கிட்டா என்னடா பண்ணுவே?”

“தொலேஞ்சுதுங்க அதோட என்னப் பிடிச்ச சனியன்! தெனந் தெனம் நாற்பது வீடு ஏறி இறங்கி, தொண்டக்கிழிய கத்தி, நாயே பேயேண்ணு திட்டினுலும் பல்லிளிச்சி கேட்டுக்கிட்டு, கழுதெமாதிரி வெளிய கெடக்கிறத காட்டிலும், ஜெயில்லே ஜோரா இருக்கலாஞ் சாமி!”

“நீங்க எப்படிப் பாடினுலும் உங்களை யெல்லாம் பிடிச்சி சிறையிலடைக்க மாட்டாங்க! போலீசை விட்டு அடிச்சி விரட்டு வாங்க!”

‘உங்களெப்போல இருக்கிறவங்களெ பிடிச்சி ஜெயில்லே போடுவாங்க! என்னப் போல பிச்சைக்காரனெ அடிச்சி விரட்டுவாங்க! ஆனுல் புதுமாதிரிலே செய்யராங்களெ பிரசாரம், அவங்களெ இந்தச் சர்க்கார் ஒண்ணும் செய்துடாது சாமி செய்துடாது!”

‘ அதென்னடா புதுமாதிரி பிரசாரம்? எங்களுக்கெல்லாம் தெரியாதது? யாருடா அப்படிச் செய்யறவங்க?”

“வேறு யாருங்க? நம்ம மதருஸ் ஓட்டல்கார மொதலாளிங்க தான்! சர்க்காருக்கு எதிரா சாமர்த்தியமா பிரசாரம் செய்யிராங்க!”

“அவங்களாலெ என்னடா முடியும்?”

“ நம்மாலெ ஒண்ணும் ஆகாதுண்ணு வேணும்ணு சொல்லுங்க! அவங்களாலெ ஆகாததுங்களே உலகத்திலே ஒண்ணுமில்லங்கோ!”

‘ என்னடா அப்படிச் செய்திருங்க அவங்க? விஷயத்தை விளக்கமா சொல்லுடா!”

“இப்ப சக்கரெதான் அணுகுண்டு படற பாடு படுதுங்களே, அதுக்காக இந்த ஊரிலே இரண்டொரு ஓட்டலிலே சக்கரெ போடாது கசப்பு காபி கொடுக்கிருங்களாம்!”

“இதிலெ என்னடா ஆச்சரியம்! சர்க்காருக்கு எதிரா என்னடா இருக்குது இதிலெ?”

“அவசர படறிங்களே! இன்னம் ஒரு ஓட்டல்லெ, ‘கசப்பு காபித்தான் கொடுக்கப்படும். தித்திப்பு வேணுங்கிறவங்க அவுங்கவிங்க வீட்டிலே இருந்து சக்கரை எடுத்துக்கிட்டு வந்து, அதிலெ போட்டுகிட்டு குடிங்க’ண்ணு எழுதியே தொங்க விட்டிருக்குது!”

“எல்லாம் சரிடா! இதிலெ என்னடா சர்க்காரெ பழிக்கிறது இருக்குது?”

“இன்னும் தெரியலிங்களா? ஓட்டலுக்கு வருகிறவங்க யாரா இருக்கும் சொல்லுங்க பார்ப்போம்?”

“பெரும்பாலும் கொஞ்சம் பணத்திலெ சுமாரா இருக்கிறவங்களாத் தான் இருக்க முடியும்.”

“இந்தச்சர்க்காரெலே, உங்க காப்பிக்கு வேண்டிய சக்கரையெ கூட கொடுக்க முடியலியே, மற்றதுக்கெல்லாம் இதாலெ என்ன முடியும்? இதப்போய் சுயாட்சிண்ணு எப்படிச் சொல்லறது? இந்த ஆட்சியெ இன்னும் நீடிக்க விடலாமா? அடுத்தத் தேர்தல்லெ ஆட்சியெ நீங்க பிடிச்சாகணும்! எண்ணு சொல்லற மாதிரி இல்லேங்களா இது? ’

டேய் பெரியாண்டி! நீ பிச்சைக்காரனு இருந்தாலும் கொஞ்சம் புத்திசாலித்தாண்டா? ’

“இந்த ஆட்சியிலெ, என்னுலெ கூட மந்திரி வேலெ பார்த்துட முடியுங்க! ’

“ஏண்டா போக்கிரி! அப்படியெல்லாம் சொல்லாதேடா!”

“இந்த மந்திரிகள்ளாம் தெனம் தெனம் ஊர் ஊராப் போய் ‘காந்தி பஜனெ’ தானே, சாமி, பண்ணுருங்கோ! இவங்களெக் காட்டிலும் நான் நல்லா காந்தி பாட்டுப் பாடி பழக்கமாச்சிங்களே! ’

இப்போது ஓட்டலில், கசப்புக் காபியைக் கொடுத்துவிட்டு, சர்க்கரையை வீட்டில் இருந்து கொண்டு வந்து போட்டுச் சாப்பிடச் சொல்லுகிருர்கள். பணமும் முன் போலவே வாங்கிக்கொள்ளுகிருர்கள். ஓட்டல் தொழிலாளர்களுக்கும் முதலாளிகளுக்கும் தகராறு ஏற்பட்டால் ஓட்டலுக்குப் போகிறவர்களை எல்லாம், நீங்களே பலகாரம் சுட்டுச் சாப்பிட்டுக் கொள்ளுங்கள் என்று பலகையில் எழுதித் தொங்கவிட்டாலும் தொங்க விடுவார்கள்!

அணுச்சக்தியை ஆக்கவேலைக்குப் பயன்படுத்துவோம்

ஆதிக்கவெறி யில்லை; அமைதிக்கு வழிகோலுவோம்

சோவியத் புரட்சி தின விழாவில் தோழர் ஜியார்ஜ் மாலெங்கோவ் முழக்கம்

"புது யுத்தங்களைக் கிளப்பி விட்டு யாரும் கண்டும் கேட்டுமிராத ஒரு உலக சாம்ராஜ்யத்தை ஸ்தாபிக்க அமெரிக்கா விரும்புகிறது. உலகத்தை அடிமையாக்குவதுதான் அமெரிக்காவின் நோக்கம். அணுச்சக்தியை ரஷியா தொழில் முன்னேற்றத்துக்கு உபயோகப் படுத்தும். யுத்தத்தை ரஷியா விரும்பவில்லை. யுத்தம் பெருகுவதைத் தடுக்க ரஷியா தன்னாலியன்றதை எல்லாம் செய்யும். சமாதானம நிலவவேண்டும் என்பதுதான் ரஷியாவின் கொள்கை"

என்று சோவியத் உப பிரதமர் தோழர் ஜியார்ஜ் மாலெங்கோவ் சோவியத் புரட்சியின் 32-வது வருஷ விழாவின்போது மாஸ்கோவில் ஒரு பொதுக்கூட்டத்தில் பேசியிருக்கிறார். 'ரஷியா ஆதிக்கவெறி பிடித்தலைகிறது. மற்றொரு போருக்கு வழிகோலுகிறது; அமைதியை அழிக்கப் பார்க்கிறது' என்றெல்லாம் அமெரிக்காவும், அதன் அடிவருடி முதலாளித்வ நாடுகளும் ஓயாது ஒலமிட்டுக் கொண்டிருக்கும் இச்சமயத்தில்தான் அத்தகைய குற்றச்சாட்டுகளுக்கு ஆளாகியிருக்கும் ரஷியாவின் உதவிப் பிரதமர் ரஷியாவின் நோக்கம் இன்னது என்பதை மேற்கண்டவாறு தெளிவாக எடுத்துக் காட்டியிருக்கிறார். அதுவும் சாதாரண சந்தர்ப்பத்தில் அல்ல; புரட்சி தினம் கொண்டாடப்பட்டபோது. தோழர் ஜியார்ஜ் மாலெங்கோவ் புரட்சியின் அவசியத்தைக் குறித்துப் பேசவேண்டிய ஒரு சந்தர்ப்பத்தில் அமைதிக்கு வழியென்ன என்பதை அழகுற எடுத்துக் காட்டியிருக்கிறார். "அணுக்குண்டு கிடைத்துவிட்டது, இனி கவலையில்லை. அதைக் கொண்டு பகை நாடுகளை வீழ்த்திவிட்டு உலகில் பண அரசை நிலைநாட்டலாம்" என்று அமெரிக்கா கருதிக் கொண்டிருந்தது. ஆனால் அதே அணுக்குண்டைக் கண்டுபிடித்த ரஷியா அதன் உதவியால் தொழில் வளர்ச்சிக்கு வழிகோலத் திட்டமிடுகிறது. அதுதான் புரட்சி என்று கருதுகிறது. அத்தகைய புரட்சியின் மூலமே உலகில் அமைதியை நிலவச் செய்ய முடியும் என்று நம்புகிறது. அமெரிக்கா அடிக்கடி சுட்டிக்காட்டுவதுபோல், ரஷியா போருக்கு [illegible] வித்தூன்றுவதாக இருந்தால் இந்தப் புரட்சி தின விழாவில் இப்படிப்பட்ட ஒரு சாதாரண போதனை செய்ய முன் வந்திருக்கமாட்டார். தோழர் ஜியார்ஜ் மாலெங்கோவ் உண்மையிலேயே போர் முரசு கொட்டியிருப்பார். ராணுவத்தைப் பெருக்க வேண்டியதன் அவசியம் குறித்து பேசியிருப்பார். ஆனால் நடந்தது அது அல்ல. ஜனநாயகத்துக்குப் பாதை வகுத்துக்காட்டியிருக்கிறார். இதுதான் முதலாளித்துவநாட்டு மனப்பான்மைக்கும் தொழிலரசின் மனப்பான்மைக்கும் உள்ள வேற்றுமை.

தோழர் ஜியார்ஜ் மாலெங்கோவ் தனது பேச்சில் அமெரிக்காவின் போராசையைச் சுட்டிக்காட்டியிருப்பது கண்டு நம் நாட்டு தேசிய ஏடுகள் 'அமெரிக்கா மீது ரஷ்யா பாய்ச்சல்!" என்று குதிபோடுகின்றனவே யன்றி புரட்சி தின விழாவிலே சோவியத் உதவிப் பிரதமர் சுட்டிக்காட்டியிருக்கும் உண்மைகளை உணராதது வருந்தத்தக்கதே.

இலங்கையைப் பாருங்கள்!

சென்னை அரசாங்கத்திற்கு அறிவுரை

அண்மையில் இலங்கையில் முதல் முறையாகக் கொழும்பு மாஜிஸ்டிரேட் கோர்ட்டில் ஒரு வழக்கு தமிழிலும், மற்றொரு வழக்கு சிங்களத்திலும் விசாரணை செய்யப்பட்டது. சென்றவாரம் நடந்த நீதிபரிபாலன இலாகா அதிகாரிகள் மாநாட்டில் கூடுமான வரை வழக்குகளை அந்தந்த நாட்டு மொழியிலேயே விசாரிக்க வேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டதை ஒட்டியே இங்ஙனம் தமிழிலும், சிங்களத்திலும் வழக்குகள் விசாரிக்கப்பட்டதாகத் தெரிகிறது. இலங்கை நீதிபதி தோழர் டி. சில்வா அவர்கள் ஒரு சிங்களவராயிருந்தும், தாம் விசாரித்த சாட்சிகளின் வாக்குமூலத்தைத் தமிழில் சரியானபடி மொழிபெயர்த்துச்சொன்னாராம்.

இது இலங்கை நிகழ்ச்சி. இந்நிகழ்ச்சியை நமது சென்னை மாகாண அரசியலாருக்கு அப்படியே அர்ப்பணம் செய்கிறோம். தாய் மொழி—அதன் சிறப்பு, அவசியத்தையும் பற்றி இங்குப் பேசப்படும் அளவு வேறெந்த நாட்டிலும் பேசப்படுவதில்லை. ஆனால் நடைமுறையில் தாய்மொழிப் போற்றப்படுவதில்லை. சொல் வேறு செயல் வேறு என்ற நிலை நிலவுகிறது இங்கு. இதே நேரத்தில் தான், தாய்மொழியின் உயர்வுபற்றி எதும் பேசாத இலங்கை அரசியலார் தாய்மொழிக்கு நடைமுறையில் உயர்வு காட்ட முன் வந்திருக்கின்றனர். இதைக்கண்ட பிறகேனும்சென்னை அரசியலாருக்கு நல்லறிவும், உண்மையான தாய்மொழிப் பற்றும் உண்டாகும் என எதிர்பார்க்கிறோம். இங்கு அரசாங்க விவகாரங்களைத் தமிழிலேயே நடத்த இயலவில்லை என்கின்றனர் நமது அரசியலார். அயல் நாட்டில் தமிழ் போற்றப்படும் அளவுகூட தாய்நாடாகிய தமிழ் நாட்டில் போற்றப்படவில்லை. இந்த இழிநிலைமாறவேண்டுமானால் "இலங்கையைப் பாருங்கள்"? என்று நமது அரசியலாருக்கு அறிவுறுத்துவதைத்தவிரவேறென்ன சொல்வதென்றே புரியவில்லை.

கழகத் தோழர்களுக்கு

தி. மு. கழகப் பொதுச் செயலாளர் தோழர் சி. என். அண்ணாத்துரை அவர்களை, எல்லா ஊர்த் தோழர்களும் ஒரே காலத்தில், தங்கள் தங்கள் ஊருக்கு வரும்படி அழைப்பு அஞ்சல்கள் விடுத்த வண்ணம் இருக்கின்றனர். அந்தத் தோழர்களுடைய ஆர்வத்தையும், உற்சாகத்தையுங் கண்டு பெரிதும் பாராட்டுகிறோம் என்றாலும், அவர்களுடைய விருப்பத்தை ஒரே காலத்தில்-உடனடியாக நிறைவேற்றித்தர இயலாமைக்கு வருந்துகிறோம்.

கழகத் தோழர்களின் ஆவலை, நாளடைவில் நிறைவேற்றித் தரும் பொருட்டு, தோழர் அண்ணாத்துரை அவர்கள், மாவட்டந்தோறும் சுற்றுப்பிரயாணம் செய்ய திட்டமிட்டுள்ளார்கள். டிசம்பர் திங்கள் இறுதி வாரத்திலிருந்து, ஒவ்வொரு மாவட்டமாகத் தொடர்ந்து சுற்றுப்பிரயாணம் செய்வார்கள். அது வரையிலும் பொறுமையைக் கடைப்பிடிக்கக்கழகத்தோழர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

இடைக்காலத்தில், பிரசாரத்தில் ஈடுபட்டுள்ள ஏனைய தோழர்களை அழைத்துப் பொதுக்கூட்டம் நடத்துமாறு கிளைக் கழகச் செயலாளர்களைக் கேட்டுக்கொள்கிறேன்

இரா. நெடுஞ்செழியன்.
செயலாளர்.
தி மு. க பிரசாரக் குழு,
தலைமை நிலையம்

அன்று அப்படி; இன்று இப்படி!

'இந்திய விவசாயி முன்பைவிட இப்போது எவ்வளவோ நன்றாயிருக்கிறான். அன்று அவன் பட்டினிக் கோட்டில் நின்றிருந்தான்' என்று பிரதமர் நேரு அமெரிக்காவில் அடித்து விளாசியிருக்கிறார்.

ஆனால் உண்மையில் நாம் விவசாயியை நெருங்கிக் கேட்கிறபோது, "அன்றுபட்டினிக்கோட்டிலிருந்தேன்; இன்று பட்டினி சாம்ராஜ்யத்திலேயே புகுந்து விட்டேன்' என்று கூறுகிறான்.

பெரிய இடங்களின் பொல்லாப்பு ஏன்?

அவசரமில்லை ஆகட்டும், மெதுவாய்!

சென்னை சட்டசபைக் காங்கிரஸ் கட்சியின் செயற்குழுக் கூட்டம் கடந்த 6-ந் தேதி நடைபெற்றதில் குதிரைப்பந்தய சூதாட்டத்தைத் தடை செய்யும் சென்னை சர்க்காரின் சட்டமொன்றை அமுல் செய்யும் பிரச்சினை விவாதிக்கப்பட்டதாம். கட்சி கூட்டத்திலும் இது விரைவில் விவாதத்துக்கு வருமாம். அச்சட்டம் அமுலாவதை இன்னும் ஓராண்டுக்காவது தள்ளிவைக்கும்படி சிபார்சு செய்யுமாறு கட்சியை கேட்டுக்கொள்ளுமெனத் தெரிகிறது.

கந்த புராணத்தையும் கலங்கவைக்கும் புளுகு!

நியூயார்க் நிருபரிடை நேருவின் பொருந்தாவுரை!

முதலீடுபற்றி முரண்பட்ட விளக்கவுரை

வட அமெரிக்காவில் ஏறத்தாழ ஒரு மாத காலம் சுமார் 10,000 மைல் சுற்றுப்பயணஞ் செய்து லண்டன் வழியாக இந்தியாவுக்குத் திரும்பும் நிலையில் பிரதமர் பண்டித நேரு நியூயார்க்கில் பத்திரிகை நிருபர்களிடையே தனது சுற்றுசெலவின் சிறப்பையும் இந்தியா பற்றிய செய்திகளையும் பலப்பட எடுத்துக் கூறியுள்ளார்.

'எனது வருகையால் இந்தியாவுக்கும் யு.எஸ்.க்குமிடையே அதிக அளவில் உறவு முறையேற்பட வாய்ப்பேற்பட்டிருக்கிறது' என்று பண்டிதர் பிரலாபித்துள்ளார். பண்டிதரோ, இந்தியாவோ மகிழ்ச்சியடைய வேண்டிய செய்தியல்ல இது. ட்ருமனும், மேற்கத்திய ஏகாதிபத்தியமும் மட்டற்ற மகிழ்ச்சியோடு 'வெற்றித் தண்டவம்' ஆடக்கூடியதே இது. அன்றொரு அமெரிக்க இளமாணவன் நேருவைக்கேட்டானே, 'இந்தியா அமெரிக்க பக்கமா, ரஷ்யா பக்கமா' என்று. அது போன்ற—ஏன், அதே கேள்வியே அமெரிக்க ஏகாதிபத்தியத்தை வாட்டி வந்திருக்கிறது. அக்கேள்விக்குச் சாதகமான விடையை அளித்துவிட்டார் நேரு. எனவே, அமெரிக்காவுக்குத்தான் வெற்றியும் மகிழ்ச்சியும். 'சோஷலிஸ்ட்' நேரு என்று புகழ்பெற்ற இந்தியப் பெருந்தலைவர் பண ஏகாதிபத்திய நாட்டின் நேசராகிறாரென்றால்; லாபம் யாருக்கு?

நிருபர்கள் கேட்ட பல்வேறு கேள்விகட்குப் பண்டிதர் வெகு சாமர்த்தியமாகப் பதில் கூறியுள்ளார். சிறப்பாக இந்தியாவில் முதலீடு செய்வது பற்றிப் பேசசு வந்தபோது, இந்தியா தனது மூலதனமொன்றை மட்டுமே கொண்டு தொழில்களில் ஈடுபட்டால்வளர்ச்சி அவ்வளவு துரிதமாயிராதென்றும், வழக்கமாக முதலீடு செய்பவர்கள் கையில் இப்போது பணமுடையேற்பட்டுவிட்டதென்றும், முதலீடு செய்து பழக்கமில்லாதோர் பெருவாரியினர் கையில் பணம் சென்று பார்த்து தங்கிக் கிடக்கிறதென்றும், நேரு 'குயுக்தி'யாகக் குறிப்பிட்டுள்ளார். அவர் மட்டுமல்ல, இந்திய சர்க்காரே இப்போது இது போன்ற பாணியில் தனது பிரசாரத்தைச் செய்து வருகிறது. முதலாளித்வ மனப்போக்குடைசர்க்காரென்று தனது நிலையினை பத்திரப்படுத்திக்கொள்ள இது போன்ற 'சாக்கு போக்கு'களிலெல்லாம் ஈடுபடுதல் இயற்கையே.

வழக்கமாக முதலீடு செய்வோர் கையில் பணம் கட்டையாகி விட்டது உண்மையென்றே வைத்துக் கொள்வோம், பெருவாரியானவேறு பலரிடம் பணம் சென்று பார்ந்து கிடக்கிறதென்பதையும் நேருவுக்காக நம்புவோம்; இந்த நிலையில் பொறுப்புள்ள சர்க்காரின் கடமையென்ன? பணம் படைத்தவர், ஆனால் முதலீடு செய்வதில் பழக்கமற்றப் பெருவாரியினரை சர்க்கார் ஏன் பயன் படுத்திக் கொள்ளக்கூடாது. சர்க்கார் கண்காணிப்பைச் செலுத்தி அவர்களது மூலதனத்தைக்கொண்டு பெருந் தொழில்களை மேற்கொள்வதில் என்ன சங்கடம் சர்க்காருக்கு? 'தொழில்களைத் தேசிய மயமாக்குதல்' என்ற திட்டத்தை மனப்பூர்வமாய் மேற்கொண்டால் சர்க்கார் சலுகையும் ஆதரவும் தமக்குக்கிடைக்குமென்ற நம்பிக்கை அப்பட்டமாக [illegible] 'பெரும்பான்மையோருக்கு' வந்தாறல் இப்பிரச்சினையை எவ்வளவு எளிதில் தீர்த்து விட இயலும்! இதனைச்செய்ய மனமில்லாது போவதேன் நேரு சர்க்காருக்கு? முதல் தர முதலாளிகளின் ஆட்சியும் ஆதிக்கமுமே இருக்கவேண்டும்; மக்களாட்சி மலர்வது மனதிற்குக் கசப்பு தருவது என்பதுதானே. இப்படித் தொழில்களைத்தேசிய மயமாக்கும் திட்டங்களைத்தான் விலக்கியிருப்பதின் தத்துவம்-நேரு தவறுகளோ அன்றி உள்ளதைத் திரித்தோ கூறுவது போல் பணம் பழக்கமற்றோர் கையில் சென்று சிக்கிக் கொள்ளவுமில்லை. பரம்பரை முதலாளிகளிடம் சத்தமாய் இல்லாமற் போய்விடவுமில்லை ஆனால் பெரும் பகுதி இவ்விருதரப் பாருமல்லாத ஒரு தரப்பாரிடம் சென்று குவிந்து கிடக்கிறது. நாட்டைச் சீர் கெடுக்க வேண்டுமென்பதே அவர்களது எண்ணம். அத்தனித்தரப் பாரை சர்க்கார் அறியார்களென்றும் கூற முடியாது.

மனமறிந்த புளுகு

நிருபர்கள் கேட்ட இன் [illegible] கேள்விக்குப் பண்டித நேரு [illegible] லைப் புளுகொன்று கூறியுள் [illegible] அமெரிக்கர்களுக்குத்தானே கூ [illegible] கிறோம். இந்தியாவுக்கு எங்கு எட்டப்போகிறது என்று கூறினாரோ என்னவோ, அதையுணராமல் [illegible] நாட்டுப் பத்திரிகைகளும் பண்டித [illegible] பதிலைப்போட்டுவிட்டன. கந்த [illegible] னைப் புளுகையும் விஞ்சிவிட்டது, நேருவின்புளுகு. இந்தியாவில் தொழிலாளர் தலைவர்களையும் இன்னும் மற்ற மற்றத் தலைவர்களையும் காவலில் வைத்திருப்பதுபற்றி நியூயார்க் நிருபர்கள் கேட்டிருக்கின்றனர். நேருவுக்குத் தூக்கி வாரிப் போட்டிருக்கும்! ஆனால் அவரா ஏமாறுவார்! திடீரென்று சமாளித்துக்கொண்டு கீழ்க்கண்டதை 'நிர்தாட்சண்யமாய்'க் கூறியிருக்கிறார்:

"இந்தியாவில் விசாரணையின்றி காவலில் வைக்கப்பட்டிருப்போருள் பெரும்பான்மையினர் கம்யூனிஸ்டுகளல்லர்; ஆனால் வகுப்பு வெறிக் கிளர்ச்சிக்காரரே"

'ஒரே கல்லில் இரண்டு மாங்காய்' என்பது போல் இந்த ஒரு பெரும் புளுகால் இரண்டு 'சபாஷ்' பட்டத்தைப் பெற அருகதையாய் விட்டார் நேரு. தொழிலாளர் கிளர்ச்சியைத் துச்சமாகக் கருதி அடக்குமுறை செய்யவில்லை, வகுப்புவெறியர்களை நாட்டிலே நடமாட விடவில்லை என்று பொருள் படும் பொருந்திவிட்டது புளுகு!

உண்மையென்ன? காவலில் கிடப்போர் பெரும்பான்மையோர் கம்யூனிஸ்டுகளே. அவர்கள் விசாரணையின்றி வைக்கப்பட்டிருக்கின்றனரென்பது மட்டுமல்ல, அவ்வப்போது சிறையில் தடியடிப் பிரயோகமும், துப்பாக்கிப் பிரயோகமும் செய்யப்பட்டு மட்டம் தட்டப்பட்டு வருகிறார்கள். மாறாக, நேரு கூறும் 'வகுப்புவெறியர்களோ', கட்டவிழ்த்துவிடப்பட்டு விட்டனர். அவர்களின் உயர் தலைவரே அவிழ்த்து விடப்பட்டு நாடு—நகரில் 'உலா' வந்துகொண்டிருக்கிறார். பொறுப்புமிக்க [illegible] பெற [illegible] இருக்க வேண்டிய நேரு போன்ற நிலையிலுள்ளோர் இது போல மனத்தான மனமறிந்த புளுகில் ஈடுபடுதல் நியாயமா? [illegible] என்ன [illegible] இன்னும் சாதாரண மனிதன்.

கழகப் பொதுக்கூட்டங்கள்

திருமால்பூர்

திருமால்பூர், அக் 30
25—10—49 செவ்வாய்க்கிழமை மாலை 6 மணிக்குத் தோழர் செ. எ. மூத்தாண்டவனார் அவர்கள் தலைமையில், திராவிட முன்னேற்றக்கழக துவக்க விழா க்கூட்டம் நடந்தது. ஊர்வலம், மிக அழகான முறையில் நடந்தது அது சமயம்—

தோழர் ஏ. ஆர் வெங்கடராமன், ச. குமாரசாமி ஆகியோர் பேசினர். பிறகு நன்றிகூறக் கூட்டம் இனிது கலைந்தது. முதலில தோழர் இராசகோபால், ஆந்தரி, ஆகியவர்களால் திராவிட நாட்டு பண்பாடப்பட்டது. கூட்டத்திற்குப் பெருவாரியான மக்கள் கூடியிருந்தனர். (வி-உ)

திருக்காரவாசல்

திருக்காரவாசல், நவ. 2—
தஞ்சை மாவட்டம், திருக்காரவாசல் தி. மு. க கிளையின் துவக்கவிழாப் பொதுக்கூட்டம், 31—10—49 மாலை 6-மணிக்கு, இவ்வூர் தோழர் சுப்பிரமணியம் அவர்கள் மிதிவண்டி நிலையத்திற்கு எதிரில் நடைபெற்றது. அதுபோது இராதாநஞ்சை தோழர் பெருமாள் அவர்கள்தலைமை வகித்தார். தோழர் எஸ். முருகையன் அவர்கள தி. மு. க. கொடியை ஏற்றிவைத்துப் பேசினார் தோழர்கள் வி. எஸ் ஆமாணிக்கம், வே. இராசமாணிக்கம், ஆகியோர் பேசியபின் தோழர் பி. சேவகபா அவர்கள் பேசுகையில், புதிய கழகம் ஏற்படவேண்டிய இன்றியமையாமை குறித்தும், பெரியார் அவர்கள் செயதுகொண்ட பொருந்தாத் திருமணம் பற்றியும், பெரியார் விடுத்துவரும் அறிக்கைகளும், பேசிவரும் பேச்சுக்களும் முன்னுக்குப்பின் முரண்பட்டிருப்பதாகவும் விளக்கினார். தலைவர் முடிவுரைக்குப் பிறகு நன்றிகூறலுடன் கூட்டம் இனிது முடிவுற்றது. (வி. உ.)

ஏட்டணைத்தம்

ஏட்டணைத்தம், நவ. 2—
ஏட்டணைத்தம் (மணியாச்சி) திராவிட முன்னேற்றக் கழக—சிற்றூர்க்கிளையின் துவக்கவிழாக கூட்டம் 1—11—49 அன்று நடந்தது. தோழர் மூத்து கிருஷ்ணன் தலைமை வகித்தார். தாததுக்குடி தோழர்கள் இரா. எ. தங்கபபழம், எஸ் நடராஜன் ஆகியோர் கழகக் கொள்கைகளை விளக்கியும், கிராம மக்களின் முன்னேற்றத்தைப் பற்றியும் பேசினர். (வி-உ)

மழுசாபுரம்

மழுசாபுரம், அக். 31—
இவ்வூர் தி. மு. கழகக்கிளையின் துவக்க விழா. என், எஸ். கே. பகதாட்ட மைதானத்தில் 30-10-49 இரவு 7-30 மணிக்குத் தோழர் கா அய்யனார் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. அதுபோது அறப்புக்கோட்டைத் தோழர் எம். எஸ் இராமசாமி அவர்கள சொற்பொழிவாற்றினார். அவர் பேசகையில், இங்குக் கூடியிருக்கும் நம் அனைவரும் திராவிட கழகத்திலிருந்தவர்களே இப்பொழுது திராவிட முன்னேற்றக் கழகம் அமைத்திருப்பது பெரியாரின் பொருந்தா மணத்தின் விளைவே. முதலில். தேசிய ஏடுகளிலே கண்டோம் ஈ. வே. ரா—மணியம்மைத் திருமணம் பற்றி. திடுக்கிட்டோம்! பின் அவ்வேடுகள் திரித்துக்கூறியிருக்கலாம் என எண்ணி. நாளை 'விடுதலை' வரட்டும் பார்க்கலாம்; அதிலே ஏதேனும் மறுப்பு வரலாம் என்றுபொறுத்தோம். ஆனால் அதற்கு மாறாக, பெரியாரின் திருமண ஏற்பாட்டைக்கண்டோம், கலங்கினோம்; வேதனைப்பட்டோம். அண்ணா, நீலமேகம் போன்ற அரும்பெருந்தொண்டர்கள்பலர்வேண்டாம் இந்த விபரீத ஏற்பாடு விட்டுவிடுங்கள் என்று வேண்டியும், பெரியார் தன் பிடிவாதத்தை விடவில்லை. மணியம்மையை மணம் கொண்டார். எனவே, நாம் கண்ணியமாக விலகினோம்; புதிய கழகம் கண்டோம். இதனால் பெரியாரின் பெருத்தஎசலுக்கும் உள்ளானோம். 'துரோகிகள்' "சுயநலமிகள்" 'வயிறுப் பிழைப்புக்காக' அமைத்துவிட்டார்கள் புது கழகம் என்றார்.

சுயநலத்திற்கும், வயிற்றுப் பிழைப்புக்கும் வழி தேடுபவர்களாயிருந்தால் இதுவரை நாம் திராவிடர் கழகத்தில் இருந்திருக்க முடியாது. அப்படிப பட்டவர்களாயிருந்தால் மாற்றுக் கட்சியிலே இரு கையேந்தி வரவேற்க இருக்கிறார்கள் எங்கள் அண்ணா, செழியன்போன்றாரை. ஏன்? காங்கிரசிலே சேர்ந்து நல் பிழைப்புக்கு வழிசெய்துகொள்ள வசதியில்லையா? அது எங்களுக்குத் தெரியாதா? அப்படிச் செய்துகொள்ள முடியும் எங்களுக்கு ஆனால் எங்களுக்கு கொள்கை— குறிக்கோள்தான் முக்கியம் கொள்கைக்காகவே கழகத்திலே சேர்ந்தோம், தலைவருக்காக அல்ல தலைவர் கொள்கையினின்று தவறிவிட்டார். எனவே நம் தலைவரை விட்டுப் பிரிந்தோம்— கொள்கையினின்று பிரியவில்லை—தனிக் கழகம் கண்டோம். புதிய கொள்கையுடன் அல்ல; பழைய கொள்கையுடனேயே. சற்று புது முறுக்குடன் பணியாற்ற துவங்கியுள்ளோம் திராவிட முன்னேற்றக்கழகம் என்ற பெயரில்." மேலும் அவர் பேசுகையில் அரசியலாரின் அடக்குமுறையைக் கண்டித்தும், அரசியல்வடநாட்டு ஆதிக்கத்தைக் கண்டித்தும், விரிவாகப் பேசி முடித்தார். பின்பு தோழர் அ. கனியப்பன் நன்றிகூறக் கூட்டம் இனிது முடிந்தது. (வி. உ.)

அனந்தப்பூர்

அனந்தப்பூர், நவ. 1—
திராவிடர் இயக்கத் தோழர்களின் கூட்டமொன்று அனந்தபூர் (ஓ-டி) புக்கராய சமுத்திர ஏரிக்கரையில் 30-10-49 ஞாயிறு மாலை 5-30 மணிக்கு நடைபெற்றது தோழர் மு. டானியல் அவர்கள் கூட்டத்தின் நோக்கத்தை விளக்கியும், பேச்சாளரை அறிமுகப்படுத்தியும் பேசிய பிறகு, சென்னைத் தோழர் வி. முத்துசாமி அவர்கள 2-மணி நேரம் உணர்ச்சித்ததும்ப கழக நடவடிக்கைகள் குறித்தும் பெரியாரின் பொருந்தா மணம், சுவாமிநாதன் மகாமக்கப் பெரியார் விடுதலையில் கொடுத்த விளக்கங்களின் போக்கையும் பற்றிப் பேசி, திராவிடர் கழகத்தின் எதிரொலியாகதிராவிடர் முன்னேற்றக் கழகம் தோன்றியக் காரணம், நமது எதிர்கால வேலை திட்டம் ஆகியவைகளைக் குறித்து மிகவும் விளக்கமாக தகுந்த மேற்கோள்களுடன் சொற்பொழிவாற்றினார். இடையிடையே தோழர்களால் எழுப்பப்பட்ட சந்தேகங்களுக்கும், கேள்விகளுக்கும் நல்ல முறையில் விளக்கம் தந்து பாராட்டுதலுக்கு உரித்தானார். இரவு 7-45க்கு நன்றி கூறுதலுடன் கூட்டம் இனிது முடிந்தது. இந்தக் கூட்டம் தோழர்களுக்கு விஷய விளக்கத்தையும், கொள்கையில உறுதியையும் ஏற்படுத்தியுள்ளது என்று கூறுவது மிகையாகாது அடுத்தக் கூட்டம் பெல்லாரி (Bellary Dt) யில் நடத்த முயற்சிக்கப்படுகிறது என அமைப்பாளர் தோழர் மு. டானியல் எழுதுகிறார்.

சென்னை-புரசைபாக்கம்

சென்னை-புரசை, நவ 7—
புரசை பாக்கம் தி. மு. கழக துவக்கவிழா நேற்று மாலை சென்னைப் புரசைபாக்கம் அன்னதான சமாஜக் கட்டிடத்தில் நடைபெற்றது. கட்டிடத்தின் உள்ளும் புறமும் ஏராளமான மக்கள் குழுமி இருந்தனர். தோழர் சம்பத்குமார் திராவிடநாட்டுப் பண் பாடியபின் 5·30 மணிக்குக் கூட்டம் ஆரம்பமாயிற்று. கூட்டத்திற்கு தோழர் கே. கோவிந்தசாமி அவர்கள் தலைமைதாங்கினார். தோழர்கள் டி. எஸ். வேலன், கே. பாலகிருஷ்ணன், கே. ஏ. மதியழகன், க. அன்பழகன் ஆகியோர் பேசினர்.

தலைமைவகித்த தோழர் கே. கே. விந்தசாமி தனது தலைமையுரையில் திராவிடர் இயக்க வளர்ந்த வரலாறு, ஆரிய—திராவிடப் பிரச்சினை, திராவிடரின் இழிவு நீக்கவேண்டிய அவசியம் ஆகியவை பற்றி விளக்கமாக எடுத்துக்காட்டி, இவை அனைத்தையும் நல்லமுறையில் செய்யவே தி. மு. கழகம் தோன்றியுள்ளது என்றும் பேசினார்.

அடுத்து பேசிய தோழர்கள் டி. எஸ். வேலன், கோகுலகிருஷ்ணன் ஆகியோர் தி. மு. கழக நோக்கங்களைச் சுருக்கச் சொல்லி அதற்கு மக்கள் ஆதரவு தரவேண்டுமென்று கேட்டுக்கொண்டனர்.

பின்னர் பேசிய தோழர் கே. ஏ. மதியழகன அவர்கள், எங்கெல்லாம் அநீதி காணப்படுகிறதோ அங்கெல்லாம் தலையிட்டு நீதியை நிலைநாட்டுவதே திராவிடர் பண்பு என்றும், ஆந்திரர் சென்னையை உரிமை கொண்டாடுவதைக் கண்டித்தும், மூவர் கமிட்டியின் தீர்ப்பு பட்டாபியின் அறிக்கை ஆகியவற்றின் பித்தலாட்டங்களைச் சுட்டிக் காட்டி, மாகாணப் பிரிவினை மட்டும் போதாது, வடநாட்டு ஏகாதிபத்தியத்தினின்றும் திராவிடர் விடுதலை பெறவேண்டும் என்று விளக்கியும், அரசியலாரின் அடக்குமுறைகளைக் கண்டித்தும், திராவிடரின் அரசியல், பொருளாதார சமுதாய விடுதலைக்காகவே தி. மு. கழகம் தோன்றி உள்ளதென்றும் பேசினார்.

அடுத்துப் பேசிய தோழர் க. அன்பழகன் அவர்கள் மக்களுக்குப் பயனுள்ள பணியாற்ற வேண்டும் என்பதற்காகவே தி. மு. கழகம் தோன்றியுள்ளது என்றும், காங்கிரசையும் கடவுளையும் நம்பி ஏமாந்த மக்களும், விவசாயிகளும், வேதனை அடைந்தோர் பலரும் தி. மு. கழகத்தின் பணியை எதிர்பார்க்கிறார்கள் என்றும், கம்யூனிஸ்டு, சோஷலிஸ்டுத் தோழர்களும், காங்கிரஸ் தோழர்களில் பலரும் மாணவர்களும் கழகத்தின் மறுமலர்ச்சியைக்கண்டு கழகத்தில் சேர முன் வருகிறார்களென்றும் சுயராஜ்யம் கிடைத்துவிட்ட பிறகு காங்கிரசுக்கு வேலை கிடையாது, வேலை செய்ய திட்டமும் கிடையாது என்றும், நம் நாட்டுக்கு அறிவு புரட்சித் தேவை, அதைத்தான் தி. மு. கழகம், செய்து வருகிறது. நாட்டில் தி. மு. கழகக் கொள்கைகள் பரவினால் முதியோர் கல்வி வளர்ச்சி அடையும் என்றும், ஆரியர்களைவிரட்டுவதற்காகத் தி. மு. கழகம் தோன்றவில்லை, அவர்கள் யாரையும் ஏமாற்ற வேண்டாம் என்று அவர்களைக் கேட்டுக்கொள்வதற்காகவும் நாட்டில் அமைதி நிலைக்கச்செய்வதற்காகவும் தி. மு. கழகம் தோன்றியுள்ளது என்றும் பேசினார். முடிவில் புரசை தி மு. கழகச் செயலாளர் தோழர் சுந்தரமூர்த்தி நன்றிகூறக் கூட்டம் இரவு 8-மணிக்கு இனிது முடிந்தது புரசை மக்களிடம் புத்துணர்ச்சியும் ஆர்வமும் காணப்பட்டது குறிப்பிடத்தக்கது. (வி உ)

திராவிட முன்னேற்றக் கழகக் கூட்டங்கள்

10—11—49

வடுகப்பட்டி :— ஏ. வி. பி. ஆசைத்தம்பி.

12—11—49

குடியேற்றம் :— சி என். அண்ணாத்துரை, கே. ஏ மதியழகன்.

பட்டுக்கோட்டை :— காஞ்சி. கல்யாணசுந்தரம்

சோமரசம்பேட்டை :— டி. கே. சீனிவாசன், இரா துரைராசன், என். நெடுமாறன, வி. எஸ். மணி

இனி நடப்பவை

பெரிய காஞ்சிபுரம்—பெரியகம்மாளத்தெரு தி. மு. க. கிளையின் துவக்க விழா 20·11·49 ஞாயிறு மாலை 5 மணிக்கு நடைபெறும். அதுபோது நகர் மன்ற உறுப்பினர் தோழர் சி. வி. இராசகோபால் அவர்கள் தலைமையில் தோழர் சி என். அண்ணாத்துரை அவர்கள் சொற்பொழிவாற்றுவார்கள்.

* * *

சென்னை—வால்டாக்ஸ் ரோடு, பொன்னப்பன் சந்தில் புதிதாகதிறவப்பட்டுள்ள கார்பரேஷன் இலவச வாசக சாலையின் திறப்பு விழா 10—11—49 மாலை 5 30 மணிக்கு நடைபெறும். அதுபோது கமிஷனர், தோழர் சி. நரசிம்மம் அவர்கள் தலைமையில் மேயர், தோழர் எஸ். இராமசாமி அவர்கள் திறப்பு விழாவாற்றுவார்.

திருமணங்கள்

குடந்தை, நவ. 3—
தோழர் உ. மு. கிருட்டினன்—தோழியர் பத்மா திருமணம் தோழர் கே கே. நீலமேகம அவர்கள் தலைமையில், 2—11—49-ல் நடைபெற்றது. இதன் நினைவாக ரூபாய் இரண்டு வரப்பெற்றோம். நன்றி! (ஆ-ர்)

* * *

கோவில்பட்டி, நவ. 3—
தோழர் வெள்ளைச்சாமி—தோழியர் மீனாட்சி அம்மை திருமணம், தோழர் பி. பாலகிருட்டினன் அவர்கள் தலைமையில் 2·11-49-ல் நடைபெற்றது. தோழர் அ. பெரியசாமி பேசினார். இதன் நினைவாக ரூபாய் இரண்டு வரப்பெற்றோம். நன்றி! (ஆ-ர்)

* * *

கூசாலிப்பட்டி, அக். 30—
இவ்வூர், தி. மு. க. உறுப்பினர் தோழர முனுசாமிக்கும், தோழியர் தயார்திக்கும் தோழர் ந. வே. அ. வள்ளிமுத்து அவர்கள் தலைமையில், 28—10—49-ல் வாழ்க்கை ஒப்பந்தம் நடைபெற்றது. இதன் நினைவாக ரூபாய் ஒன்று வரப்பெற்றோம். நன்றி! (ஆ-ர்)

ஜமீன் ஆலமரத்துப்பட்டி, நவ. 2-
இவ்வூர் தி. மு. க. தோழர் ஆர். பழனிசாமி அவர்கட்கும், தோழியர் எல். மாரியம்மாளுக்கும் 28—10—49 அன்று, தோழர் எ. சின்னசாமி அவர்கள் தலைமையில் சிறப்பாகத் திருமணம் நடைபெற்றது. இதன் நினைவாக ரூபாய் ஒன்று வரப்பெற்றோம். நன்றி! (ஆ-ர்)

* * *

அடைமயாாயக்கனூர், நவ. 4—
தோழர் பழனியப்பன்—தோழியர் லட்சுமி திருமணம் 3 11-49-ல் மதுரை தோழர் முத்து அவர்கள் தலைமையில் நடைபெற்றது. தோழர் இரா. துரைராசன், எம். அய்யாசாமி, ஆகியோர் சீர்திருத்தத் திருமணம் குறித்துப் பேசினார். இதன் நினைவாக ரூபாய் ஒன்று வரப்பெற்றோம். நன்றி! (ஆ-ர்)

* * *

திருத்தங்கல், நவ. 4—
இவ்வூர் தி. மு. க. தோழர் அ. குருசாமிக்கும், தூத்துக்குடி தோழியர் சு. பாமாமணிக்கும் 2—11—49 அன்று, தோழர் வி. வி தனுஷ்கோடி அவர்கள தலைமையில் திருமணம் நடைபெற்றது. இதன் நினைவாக திருத்தங்கல் தி. மு. க கிளைக்கு ரூபாய் இரண்டு அளிக்கப்பட்டது. மாலை மணிக்கு ரூபாய் ஒன்று வர பெற்றோம். நன்றி! (ஆ-ர்)

சந்தாதாரர்களுக்கு

தங்கள் எழுதும் கடிதங்களிலும், அனுப்பும் மணியார்டர்களிலும் தங்கள் சந்தா எண்ணைக் குறித்து எழுதும்படிக் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள் சந்தா எண் குறிக்காமல் முன்னால் கண்டபடி கவனிக்கப்படமாட்டாது, என்பதைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

மானேஜர், 'மாலைமணி'

உழைப்போருக்கு ஊக்கமளிக்கவில்லை

கருங்காலிகளுக்குக் கைகொடுக்கிறது அரசாங்கம்

ஒத்துழைத்த ஊழியர்களுக்குக் கைமாறும்!

சென்னை அரசியலார் மிக மிக நல்லவர்கள். நன்றிமிக்கவர்கள்! செய்நன்றி மறவாத சீலர்கள்! ஊதியம் போதவில்லை என்று சொல்லும் உத்தியோகஸ்தர்களைக் கண்டால் இவர்களுக்குப் பிடிக்காது. ஊதிய உயர்வு கேட்காமல் ஊமைகளாய் உழைப்பவர், அல்லது கருங்காலிகளாக இருந்து ஊதிய உயர்வு கோருவோருக்கு ஊறு செய்வோர் ஆகியோரைக் கண்டால் ஆனந்தம்! அப்படிப்பட்டவர்களை நீங்கள்தான் 'நல்ல பிள்ளைகள்' என்று தட்டிக்கொடுக்கிறார்கள்.

"ஏ. கற்றறிந்த மக்களே! நீவீர் கைமாறு காவாமல் காலத்தில் செய்த உதவிக்கு என்ன கைமாறு செய்வதென்றே எங்களுக்குப் புரியவில்லை. ஒரு மாத சம்பளத்தைப் போனசாகக் கொடுப்பதா, 12 மாத சம்பள உயர்வுக்குச் சமமான தொகையைக் கொடுப்பதா அல்லது ஓராண்டு முன்னதாகவே சம்பள உயர்வு ஏற்படுத்துவதா என்றெல்லாம் எண்ணி எண்ணிப் பார்க்கிறோம்." என்கின்றனர்.

யாரைக் குறித்து அரசியலார் இவ்வளவு கசிந்து உருகுகின்றனர் என்று கேட்கிறீர்களா! கொஞ்ச நாட்களுக்கு முன்னர் கெஜட் பதிவில்லாத உத்தியோகஸ்தர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டார்களல்லவா? அப்பொழுது கருங்காலிகளாய் இருந்து கண்ணியமாக அரசியலாரோடு ஒரு சில உத்தமர்கள் ஒத்துழைத்தார்கள். அவர்களுடைய அருஞ் சேவையால் என். ஜி. ஓ. க்களின் வேலை நிறுத்தம் முறிந்து போனதை வாசகர்கள் அறிவார். அப்படிப்பட்ட உத்தம உத்தியோகஸ்தர்களுக்கு நன்றிசெலுத்தப் போகிறார்களாம் சென்னை அரசியலார்! இதைத்தான் மேலே விளக்கிக் காட்டியுள்ளோம்.

என். ஜி. ஓக்கள் வேலை நிறுத்தத்தில் கலந்துகொள்ளாமலிருந்த அரசாங்க ஊழியர்களுக்குப் பணவகையில் கைமாறு செய்வது சம்பந்தமாக அரசியலார் பரிசீலனை செய்துவருகிறார்கள் என்றும், அப்படிச் செய்வதென்றால் ஒரு மாதச் சம்பளத்தைப் போனசாகக் கொடுப்பதா, 12-மாதச் சம்பள உயர்வுக்குச் சமமான தொகையைக் கொடுப்பதா, அல்லது ஓர் ஆண்டு முன் கூட்டியே சம்பளஉயர்வு கொடுப்பதா என்ற மூவகையான திட்டங்கள் பற்றிப் பரிசீலனைசெய்யப்பட்டுவருவதாகவும் சென்னை முதலமைச்சர் தோழர் குமாரசாமிராஜா அவர்கள் சமீபத்தில் தெரிவித்திருக்கிறார்.

உழைப்போருக்கு ஊக்கமளிக்கும் முறையில் ஏதும் செய்யத் தெரியாவிட்டாலும் இவ்வளவு கருங்காலிகளுக்குக் கைகொடுக்கக் காரியத்தைச் சாதிக்கும் சக்தியாவது இந்த அரசாங்கத்துக்கு அமைந்திருப்பது மெச்சத்தக்கதே! ஆனால் இப்படிப்பட்டமுறை எத்தனை நாளைக்குப் பயன்படும் என்பதுதான் சிந்திக்கவேண்டிய விஷயம்.

காங்கிரஸ் கரையும் விதம் காண்க!

பதவிவேட்டை லட்சியம் தலைவிரித்தாட்டம்

மாவட்டக் காங்கிரஸ் கமிட்டிக் கூண்டோடு கலைகிறது

அண்மையில் மேற்கு கோதாவரியில் நடைபெற்ற ஜில்லாபோர்டு தலைவர் தேர்தலில் காங்கிரஸ் கட்சியால் உத்தியோகப்பூர்வமாய் நிறுத்தப்பட்ட அபேட்சகருக்கு எதிராக வேலை செய்து அவரைத் தோற்கடித்தனரென்று குற்றஞ்சாட்டி, மேற்குக் கோதாவரி ஜில்லா காங்கிரஸ் கமிட்டித் தலைவர் அல்லூரி சத்யநாராயணராஜு (எம். எல். ஏ.) பொதுச் செயலாளர் கல்காராஜு உட்படச் செயலாளர்கள் இருவர், உறுப்பினர்கள் காப்பினீடு எம் எல். ஏ. உள்பட ஐவர் ஆகியோரை ஆந்திரமாகாண காங்கிரஸ் கமிட்டித்தலைவர் தோழர் என் ஜி. ரங்கா இரண்டு மாதகாலத்துக்கு 'சஸ்பெண்டு' செய்து அவர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுத்துள்ளார். மாவட்டக் காங்கிரஸ் கமிட்டியே இப்படி 'கூண்டோடு' கலைந்துபோவதால், நிர்வாகக்காரியங்களைக் கவனிக்க 'ஸ்பெஷல் ஆபிசர்' ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளாராம்.

தேசிய இயக்கமெனப் படுவதின் 'கூநிசை' இப்படித்தான் இருந்து வரும்; இது இயற்கை. இதுபோன்ற சம்பவங்கள் நிரம்ப நிரம்பக் கேள்விப்படுகிறோம் நாட்டின் பல பகுதிகளிலும் நடப்பதாக. பதவிவேட்டைப் போட்டியுணர்ச்சி வலுப்பெற, வலுப்பெற இலட்சியமேது? ஸ்தாபனமேது? சுயநலமே கண்கண்ட தெய்வமாகக் காட்சியளிக்கும். காங்கிரசாரின் பல்வேஷம் எப்போதும் இல்லாத அளவில் இப்போது வெகுவேகமாக அம்பலமாகிவருகிறது. கரையுங்கட்சிக்குச் சப்பைகட்டுப் போட முயல்வது கடற்பெருக்குக்கு அணைபோட முயல்வதையே ஒக்கும்.

தமிழ்வித்துவான் பிரிலிமினரி வகுப்பு

இலவசமாக நடத்தப்படும்

சென்னை, நவ. 4— சி. அப்துல் ஹக்கீம் இந்து முஸ்லிம் உயர்நிலைப்பள்ளி தமிழ் மாணவர் கழகத்தின் (அகப்பநாய்க்கன் தெரு, ஜி. டி. சென்னை) சார்பில் தமிழ் வித்துவான் பிரிலிமினரி வகுப்பு இலவசமாக நடத்தப்படுகிறது. இவ்வகுப்பில் சேர்ந்து பயனை அடையவிரும்பும் அன்பர்கள் மேற்காணும் முகவரிக்கு வந்து தங்கள் பெயரைப் பதிவுசெய்து கொள்ளலாம். வகுப்புகள் திங்கள், புதன், வெள்ளிக்கிழமைகளில் மாலை 6 மணி முதல் 8 மணிவரை நடைபெறும். எனச் செயலாளர் தோழர் ப. வே. இலக்குமிபதி எழுதுகிறார்.

சென்னை அரசாங்கத்...

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

விலைவாசிகளின் உயர்வையும் எதிர்த்துத் தொல்லைப்பட்டுக் கொண்டிருக்கும் ஏழைமக்களிடம் தானா அரசாங்கம் வர வேண்டும். முதலாளிகளிடம் கவனம் செலுத்துவதைச் சற்றுக் கடுமையாக்கிக் கொண்டால் தேவையான பொருள் கிடைக்காதா? அமைச்சர்கள் நன்கு சிந்தித்து, முதலாளிகளிடம் முடங்கிக்கிடக்கும் ஏராளமான செல்வத்தை நாட்டு முன்னேற்றத்துக்குரிய நல்ல வழிகளில் பயன்படுத்த சென்னை அமைச்சர்கள் துணிய வேண்டுகிறோம். பல ஏழைகளிடமிருந்து கிடைக்கும் அற்பத் தொகையை விட முதலாளிகளை மிரட்டிப் பணிய வைத்தால், ஒரே முதலாளியிடமிருந்து, சென்னை அரசாங்கம் தனக்கு வேண்டிய பெருந்தொகையினைப் பெறலாம். மேலும், அரசாங்கம், நாட்டில் பிற கட்சிகளை அடக்குவதற்கென்றே போலீஸ் செலவினத்தைப்பெருக்கியிருப்பது போன்ற வீண் செலவினங்களில் பணத்தை விரயமாக்குவதையும் நிறுத்த வேண்டும். செலவினங்களில் சிக்கனம் காட்ட வழியில்லை என்று நிதியமைச்சர் கூறியிருப்பதை திருத்திக் கொண்டு, போலீஸ் இலாக்கா, மந்திரிசபை நிர்வாகம், இன்னும் பல இலாக்காக்களின் நிர்வாகச் செலவுகளைக் குறைக்க வேண்டும்.

மின்சார விசிறியினடியில் காற்றுவாங்கும் உயர்தர அதிகாரிகள் பலரிடம் இன்னும் அதிகமாக வேலை வாங்கும் திட்டங்களிட வேண்டும். வீணாக ஒருவேலையும் அற்றுக்கிடக்கும் பிரசார இலாக்கா, காகிதக்கண்ட்ரோல் இலாக்கா, போன்ற இன்னும் பல வேலையில்லா இலாக்காக்களை அடியோடு ஒழித்துவிடவேண்டும். சட்டசபை மந்திரிகளும் மெம்பர்களும் சம்பளமில்லாமல் உழைக்கவேண்டும். இவ்வாறெல்லாம் சிக்கனம் செய்து செலவைக்குறைத்து, கட்சிக் கௌரவம், கட்சிவெறி, கட்சிப் பிரசாரம் இவைகளை மனத்தில் வைத்துக்கொண்டு; கட்சிப் பிரசாரத்துக்காக அரசாங்கத்தைப் பயன்படுத்துவது. பிறகட்சிகளே இல்லாதபடி அடக்கி ஒடுக்க முயல்வது, இதற்குத் தக்கவாறு சட்டங்கள் செய்ய முயல்வது போன்ற விவகாரங்களை விட்டொழித்து, நாட்டு மக்களின் முன்னேற்றம் ஒன்றையே மனத்திற்கொண்டு, முதலாளிகளிடமுள்ள கள்ளமார்க்கட் பணங்களை வாங்கி, நற்காரியங்களில் செலவிடல் நலமெனக் கருதுகிறோம்.

வீர. வ. உ. சி. திராவிட முன்னேற்றக் கழகம்

தூத்துக்குடி. நவ. 1— 30-10-49 அன்று வீர. வ. உ. சிதம்பரனார் கழக உறுப்பினர்கள் கூட்டம், தோழர் அ. ராமலிங்கம் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. அதுபோது. வீர. வ.உ. சிதம்பரனார் கழகம் "வீர. வ. உ. சிதம்பரனார் திராவிட முன்னேற்றக்கழகம்" என மாற்றப்பட்டது. மேற்படி கழகம் நகர தி. மு. க. கிளையுடன் இணைந்து பணியாற்றுவதென்றும். இன்னும் சில தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டுக் கீழ்க்கண்ட செயற்குழுவினர் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

செயலாளர்:— அ. ராமலிங்கம்; துணைச் செயலாளர்:—த. சிவனையா; பொருள் உறுப்பினர்:— கோ. கந்தசாமி; விளம்பர உறுப்பினர்:—மு. வேலாயுதம். மற்ற செயற்குழுவினர்:—எஸ். பெருமாள், க. சித்திரவேல், எஸ். சம்சுதீன், ச. கணபதி, நல்லசிவம், சே. எம். ராஜன். (வி-உ)

வேஷங்கள் வெவ்வேறாயினும் வேலை ஒன்றுதான்!

ஹிந்துமகாசபை-ரா. சு. சே. சங்கம் காங்கிரஸ் எல்லாம் ஒரு குளத்து நண்டுகளே!

"கொள்கையில் ரா.சு.சே. சங்கத்திற்கும இந்து மஹா சபைக்கும் எவ்விதவித்தியாசமும இல்லை. இரு ஸ்தாபனங்களும் ஹிந்து ராஷ்டிராவை நிறுவவே விரும்புகிறது. ஆனால் இரண்டின் மார்க்கமும் வெவ்வேறாக இருக்கலாம். மதத்தினின்று அரசியலைப் பிரிக்கமுடியாது. நாடு முழுதும் கலாச்சார ஒருமைப்பாடின்றி புதிய சமுதாய அமைப்பு சாத்தியமில்லை. இயற்கைக்கு விரோதமாக மதமும் அரசியலும் பிரிந்து நிற்பதினாலேயே இன்று பலதுறைகளிலும் இன்னல்கள் பலகாணப்படுகின்றன."

என்று இந்து மகாசபைக்காரியதரிசி தோழர் லாஹிரி அவர்கள் அண்மையில் நிருபர்கள் கூட்டத்தில் பேசியபோது கூறியிருக்கிறார். தோழர் லாஹிரி அவர்களின் இந்தப்பேச்சிலிருந்து ரா.சு.சே சங்கம் வேறு, இந்து மகாசபை வேறு என்ற வாதம் அடிப்பட்டுப்போவதுடன், அண்மையில் தோழர் புருஷோத்தமதாஸ் டாண்டன் ரா. சு. சே. சங்கம் இந்துமகா சபையைப் போன்று வகுப்புவாத ஸ்தாபனமல்ல என்று கூறியிருப்பதுபொருந்தாக் கூற்று என்பதை விளக்க தோழர் லாஹிரியின் பேச்சே போதிய சான்றுமாகும்.

மேலும் தோழர் லாஹிரி அவர்கள் அரசியலும் மதமும் கலந்தே இயங்க வேண்டும் என்கிறார். மதத்தை அரசியலிலிருந்து பிரிக்க முடியாது என்றும் அழுத்திக் கூறுகிறார். இதே சமயத்தில் தான் காங்கிரஸ் அரசியலார் தமது ஆட்சிமுறை மதச்சார்பற்றது என்று பேசித்திரிகின்றனர். அதேகாரணத்தைக்காட்டி வகுப்பு உரிமைகளையும் மறைக்கப்பார்க்கின்றனர். வகுப்புவாரி பிரதிநிதித்வ முறை இருப்பது மதச்சார்பற்ற அரசியலுக்கு அழகல்ல என்று அழகுப் பேச்சு பேசுகின்றனர். காங்கிரஸ் ஆட்சியின் கண்ணியம் இத்துடனாவது நின்றதா? இல்லை; காங்கிரஸ் ஆட்சி மதச்சார்பற்ற ஆட்சி என்று சொல்லிக் கொண்டேயிருக்கும் போதுதான் ரா. சு. சே. சங்கத்துக்கு காங்கிரஸ் காரிய கமிட்டி கதவைத் திறந்து விட்டிருக்கிறது. இப்படிப்பட்ட வேளையில் தான் தோழர் லாஹிரி அரசியலும் மதமும் தனித்தனியாக இயங்க முடியாது என்றும் ரா. சு. சே. வேறு இந்துமகா சபை வேறு அல்ல என்றும் தெளிவாகச் சொல்லி விட்டார்.

எனவே இதிலிருந்து புலனாகும் உண்மை என்னவென்றால், இந்து மகாசபை ரா.சு.சே சங்கத்தில் அடக்கம்; ரா.சு.சே. சங்கம் காங்கிரசில் அடக்கம்; ஆகவே இந்து மகாசபை-ரா. சு. சே. சங்கம்-காங்கிரஸ் ஆகிய மூன்று ஸ்தாபனங்களும் உருவத்தில் வெவ்வேறாகக் காணப்பட்ட போதிலும், எல்லாம் ஆரிய ஹிந்து மதம் என்றும் ஒரேகுளத்து நண்டுகளே என்பது தான்.

இந்த மூன்று ஸ்தாபனங்களும் போட்டிருக்கும் வேஷங்கள் வெவ்வேறாயிருப்பினும் ஒரே வேலையைத் தான் செய்கின்றன.

ஏகபோகமாக வாழும் ஆசைக்கு ஒரு சாம்பிள்

திண்டுக்கல் நகரக் காங்கிரஸ் கமிட்டி சார்பில் நடந்தவொரு பொதுக்கூட்டத்தில், அமைச்சர் பக்தவத்சலனார், காமராஜர் முதலியோர் பேசினர். அந்தக் கூட்டத்தில் பேசிய பேச்சுக்கள், காங்கிரஸ்காரர்களின் உள்ளக் கருத்து என்னவென்பதைத் தெளிவுபட விளக்கிவிட்டது. அங்குப்பேசியவர்களுள் ஒருவர், "சோஷலிஸ்ட் கட்சி ஜீவனிழந்து வருகிறது; கம்யூனிஸ்ட் கட்சி காணாமற் போய்விட்டது; திராவிடர்கழகம் மணியம்மை மணத்துடன் முடிந்தது. இந்த நாட்டில் வேறு எந்தக்கட்சியும் இனி இருக்க முடியாது. காங்கிரஸ்கட்சி ஒன்றுதான் இருக்க முடியும்" என்று பெருமிதத்துடன் பேசியிருக்கிறார்.

இதிலிருந்து, இந்த நாட்டிலே, அடுத்து வரும் தேர்தல் காலத்திற்குள் காங்கிரஸ் கட்சி ஒன்றைத் தவிர்த்து வேறு எந்தக் கட்சியுமே இல்லாதபடி செய்துவிட வேண்டும் என்று, காங்கிரஸ்காரர்கள் கருத்துக்கொண்டே, பிற கட்சிகள் மீது துவேஷக்கருத்துக்களை ஊட்டியும் பொய்ப் பிரச்சாரங்களைச் செய்தும், அதிகாரத்தைப் பயன்படுத்தியும் அவை இல்லாதபடி, செய்து வருகின்றனர் என்பதற்குத் திண்டுக்கல் கூட்டம் ஒருதக்க சான்றாக விளங்குகிறது. ஆனால் காங்கிரஸ் காரர்களின் இந்தச் செயல்களெல்லாம் அவர்கள் கனவு கருதுகிறபடி தங்கள் கட்சி ஒன்றே ஏகபோகமாகக் கும்மாளமடித்து ஏழை மக்களின் நலன்களை காற்றில் பறக்க விட்டுக்கொண்டு உல்லாச சுகவாழ்க்கை வாழ்ந்து கொண்டிருக்க முடியும் என்று எண்ணுவது பகற்கனவாகவே முடியும் என்பது உறுதி.

அறிவிப்பு

ரெடிமேட் மூட்டை பவுடர், மூட்டைப்பூச்சி எறும்பு முதலியவைகளை நாசமாக்கி அபூர்வ சித்திகளை தருகிறது. சாம்பிள் டின் 1-க்கு 8 அணா ஸ்டாம்பு அனுப்பவும். G. மருதியப்ப முதலியார், மதுரை.

(1) உல்லாசக் கடிதங்கள்
(2) சிலப்பதிகாரக் காட்சிகள்
(3) கண் திறக்குமா? (தொடர் கதை)
(4) துரோகி (தொடர் கதை)
(5) சிறுவர் அரங்கம்
(6) சிறந்த கதைகள்
(7) கலையுலகம்
(8) வம்புமடம்
(9) சிறந்த சிறுகதைகள்
(10) ஆராய்ச்சிக் கட்டுரைகள்

இவை ஒவ்வொரு 'பொன்னி' யிலும் இடம்பெறும் முக்கிய பகுதிகள்

"பொன்னி"

மாதம் இருமுறை

10—11—49 முதல் 72 பக்கங்களில் விலையில் மாற்றமின்றி வெளி வருகிறாள். இந்த நற்செய்தி 'பொன்னி' வாசகர்களுக்கு மேலும் இன்பமூட்டுமல்லவா?

ஏஜண்டுகள் இல்லாத ஊர்களில் ஏஜண்டுகள் தேவை

'பொன்னி' அலுவலகம்
த. பெ. 33, புதுக்கோட்டை.

பக்தவத்சலத்தின் பதவிப்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஆச்சரியமாகக் கூறி வருவார்கள் அறிவுள்ளவர்கள்? சிங்கத்தைக் கண்டால்—சிறுத்தையைக் கண்டால்—சுவர், பட்டால பயத்தோடு! சிங்கத்தைக் கண்டு ஏற்படும் அச்சம் கண்டவனின் நெஞ்சத்தில் கட்டாயம் நடுக்கத்தைக் கொடுத்துதான் தீரும். மூளை குழப்பமடையும்! நாகுளமறு! உள்ளத்தில் மறைந்து கிடக்கும் பீதியின் தன்மையை சொற்கள் சித்தரித்துக் காட்டி நிற்கும்!

காங்கிரசை எதிர்க்கும் கட்சிகள் நாட்டில் இருக்கின்றன அவை வளர்ந்து கொண்டும் இருக்கின்றன. காங்கிரசைப் பதவியிலிருந்து விரட்டும் அளவிற்கு, வளர்ந்தோங்கும் வாய்ப்புகள் அவைகளுக்கு இருக்கின்றன. அந்த வாய்ப்பினையும், காங்கிரஸ் ஆளவந்தார்களே தேடித்தந்த வண்ணமும் இருக்கின்றனர்!

கனம் பக்தவத்சலனார், இதனை அறிவார் மற்ற அமைச்சர்களைப் போலவே அதனால்தான் அவர் கூறுகிறார் 'மற்ற கட்சிகள் அழிந்துபோகும், நாம் மட்டுந்தான் நிலைத்து நிற்போம்' என்று! நாட்டின் நிலை—மக்களின் மனமாற்றம்—அமைச்சருக்கு அச்சத்தை மூட்டுகிறது. உள்ளத்தைக் குடைகிறது. நிம்மதியை இழக்கிறார் மன சாந்திக்காக, 'நாங்கள்தான் என்றென்றும் இந்நாட்டு மன்னர்கள்' என்று வெளியில் கூறி, மன வேதனையை மறைத்துக் கொள்ளுகிறார். ஐயோ பாவம்! சாந்தி பெறட்டும், அவருக்கும் நமக்கும் என்ன சொந்தத்தில் பகையா?

வெறும் பறை அறையும் பணியில் மட்டுமே காங்கிரஸ் இருக்கவில்லை. அந்தக் காலம் போய்விட்டது! இன்று மக்களுக்கு நல்வாழ்வு தேடித்தரும், அதிகார பீடத்திலே அமர்ந்திருக்கிறார்கள். இது சமயம் இவர்களை மதிப்பிட, இவர்கள் பேசிவரும் பேச்சுகளை மட்டுமே. ஓர் பொருளாகக் கொள்ளமாட்டார்கள் இவர்கள் எடுத்துக்கொள்ளும் நடவடிக்கைகளால், தங்கள் வாழ்வு எந்த நிலையைப் பெறுகிறது என்பதைக் கொண்டுதான், இவர்கள் சொல்லுக்குத் திருப்பளிப்பார்கள் மக்கள். இந்த ஆளவந்தார்களால் வாழ்வு இரண்டுவருவதை காணுவதால் தெரிந்துகொண்ட மக்கள், இவர்களுக்கு எதிர்ப்பு முன்னணி அமைக்க முனைவராமல். முன்போல இவர்களிடம் கொஞ்சியா குலவுவார்கள்? எதிர்பார்க்கலாமா, இதனை, இந்த ஆளவந்தார்கள்?

மாற்றுக் கட்சி இருந்தாக வேண்டும் மக்களாட்சி முறைக்கு மகாத்மியா கூறுப 'மக்களாட்சிக்கு மாறாக இருக்காதாம்! ... ஆளட்சி அல்ல அது ... என்று கூற வேண்டும்!

இன்னும் சிலநாளை செறைப்பினை ... புதுமை புரியப் போகிறார்கள்! ... வந்த ... 'சஞ்சீவி' ... —செத்தவர்களை

பெட்ரோலும் குறைந்தது

குறைவுப் 'படலம்' தீராதோ!

நம்நாட்டில் இப்போது எதர் கெடுத்தாலும் இல்லை என்பது சர்வ சாதாரணமாகிவிட்டது. உணவு, போதிய அளவு இல்லை; உடை வாங்கக்கூடிய விலையில் கிடைக்கவில்லை. வாழ்க்கைச் செலவு, பல ஏழைகள் வாழமுடியாமல் சிறுகச் சிறுகச் சாகும் நிலைமைக்கு நாளுக்கு நாள் உயர்ந்து கொண்டுபோகிறது. இப்போது மோட்டார் போக்குவரத்துக்கு பயன்படும் பெட்ரோலும் குறைக்கப்பட்டிருக்கிறது.

சென்னை அரசாங்கத்தாருக்கு 88 லட்சம் காலன் பெட்ரோல் கிடைத்துவந்தது அது பின், 68 லட்சம் காலனுகக் குறைக்கப்பட்டு பின், இப்போது 48 லட்சமாகக் குறைக்கப்பட்டது. இங்கே, 6000 பஸ்களும், 9000 லாரிகளும், 25 000 தனிப்பட்ட மோட்டார் வண்டிகளும் பெட்ரோலை நம்பிக் கிடக்கின்றன எனவே, இனி இவற்றின் பெரும்பாலானவை டீசல் பஸ்களாக ஆக்கப்படவேண்டுமென்று அமைச்சர் அறிவுறுத்தியுள்ளார். மத்திய அரசாங்கத்தின் ... சென்னை விஷயத்தில் இந்த அளவுக்கு இருக்கிறது.

தமிழ்நாடு தெலுங்கர் மாநாடு

சென்னை, நவ. 7—

சென்னை நகர உரிமையை ஆந்திரர்கள் கோருவதைக் குறித்து சென்னைத் தெலுங்கு மக்களின் ... இருட்டினப்ப நாய்க்கன் தெரு 28-வது இல்லத்தில் தோழர் பி. ஜெயச்சந்திர நாயுடு பி. ஏ. பி. எல் அவர்கள் தலைமையில் 6 11 49 மாலை கூடி ஆந்திரர்களின் அக்கிரமமான கோரிக்கையை வன்மையாகக் கண்டிப்பதுடன் தமிழ் நாட்டுத் தெலுங்கர்களின் நிலைமையைத் தெளிவு படுத்த "தமிழ்நாடு தெலுங்கர் மாநாடு" ஒன்றை டிசம்பர் மாதம் மூன்றாவது வாரத்தில் சென்னையில் நடத்த முடிவு செய்யப்பட்டு அதற்கு வரவேற்புக் குழு ஒன்றும் அமைக்கப்பட்டது.

தோழர் பி. ஜெயச்சந்திர நாயுடு பி. ஏ. பி. எல்.—வரவேற்புக்குழுத் தலைவர், தோழர்கள் வி. முனுசாமி, பி. கமலாப நாயுடு; எம். கோபால் செட்டி—செயலாளர்கள், தோழர் எம். என். சுபிகோபால் நாயுடு—பொருளாளர், தோழர் முத்துகிருஷ்ணன் — அமைப்பாளர்; தோழர் ... அமைப்பாளர். இறுதியாக தோழர்கள் வி. முனுசாமி, பி. கமலாப நாயுடு ஆகியோரால் நன்றி கூறப்பட்டதும் கூட்டம் இனிது முடிந்தது. (ந.-நி.)

பிழைக்கவைக்கும் அருமருந்து—அதனை எங்கிருந்து தருவிக்கப் போகிறார்களா. இந்த நாட்டு மக்களை உர்விக்க இந்த காந்திராஜ்யச் சிற்பிகள்! ... பலிக்காது ... அக்கிரமம் கொண்ட மக்கள், உங்களை ... உள்ளம் கொள்வதற்கு ... காந்திமடம் ஒன்று அமைத்துக் கொள்ளுங்கள்! ... சாககாவை ... இந்தி ... உங்கள் வரையில் வந்து அடைந்து இன்புறுங்கள்! அவ்வளவு ... பேறும ... திராவிட மக்களை.

குதிரைப்பந்தயம் நிற்காது

மதுவிலக்கையும் ஒத்திப்போடவேண்டுமாம்

நாங்கள் ஆட்சிக்குவந்தால் முதல் வேலையாக குதிரைப்பந்தயத்தை ஒழித்துவிடுவோம் என்று காங்கிரஸ்காரர்கள் பேசிய காலம் ஒன்றிருந்தது. இப்போது, குதிரைப் பந்தயத்தைத் தடைசெய்யும் சட்டத்தை அடுத்த ஆண்டு பார்த்துக் கொள்ளலாம் என்று ஒத்திவைப்பு முயற்சி நடக்கிறது.

இதேபோன்று மதுவிலக்கை இன்னும் கொஞ்சகாலத்திற்குத் தள்ளிப்போட வேண்டுமென்று அரசாங்கத்துக்கு யோசனை கூறப்படுகிறது.

சிக்கன முறையா, வீராப்பா?

ஏற்கனவே செய்துகொண்டிருக்கும் பண்டமாற்று ஒப்பந்தத்தின்படி பாகிஸ்தான் தருவதாகச் சொன்ன 175 டன் கோதுமையினையும் வாங்கிக்கொள்ள இந்தியா மறுத்துவிட்டதாம். பாகிஸ்தான் நாணய ரூபாயின் மதிப்பைக் குறைக்கவில்லை ஆதலால், பாகிஸ்தானின் 100 ரூபாய் பெறுமான பொருளுக்கு இந்தியா 144 ரூபாய் பெறுமான பொருள் தரவேண்டியிருக்கும்; அதனால்தான் அக் கோதுமையை வாங்க முன்வரவில்லை இந்திய சர்க்கார் என்று கூறப்படலாம். இந்திய சர்க்கார் எண்ணம் அதுதானா? அதுவானால், டாலர் பகுதியிலிருந்து இறக்குமதி செய்யும் கோதுமையின் விலை அதைவிட அதிகமாகாதா? அன்னியச் செலாவணி பகுதியிலிருந்து கோதுமை கிடைக்க எவ்வளவு வாய்ப்பிருக்கிறதா? டாலர் பகுதியிலிருந்து கோதுமையை இறக்குமதி செய்ய—அதிக விலை கொடுத்து இறக்குமதி செய்ய — தயாராய் இருக்கும் சர்க்கார் பாகிஸ்தான் கோதுமையை ஒப்பந்தப்படி வாங்கிக்கொள்வதில் என்ன கோளாறுக் குறைகிறதோ? இதுபோன்ற கேள்விகளை இன்றைய சாதாரண மனிதன் கேட்கிறான். இந்தியாவைப் போல பாகிஸ்தானும் ரூபாய் மதிப்பைக் குறைக்கவில்லையே, அது சென்ன அவ்வளவு 'மண்டைக்கனம்', ஆகவே அதன் சரக்கு நமக்கு வேண்டாம்! என்ற வீராப்புதான் அடிப்படைக் காரணமோ என்றும் யூகிக்கிறான்.

முதலாளித்துவ நாடுகள் பக்கந்தான்!

அமெரிக்க சுற்றுச் செலவை முடித்து இந்தியா திரும்பும் வழியிலிருந்த பண்டித நேரு, "என்னை அமெரிக்கச் சுற்றுச் செலவு மேற்கத்திய உலகுக்கும் ஆசியாவுக்குமிடையே நல்லுறவை ஏற்படுத்துமென நம்புகிறேன்" என்று குறிப்பிட்டுள்ளார்.

"தங்களது வருகையால் கிழக்குக்கும் மேற்குக்கும் நல்லுறவு ஏற்படுமோ" வென்று கேட்டதற்கு "கிழக்கு என்ற கூப்பிடு ... ஆகிய வார்த்தைகளை ... கட்டம் நல்லுறவு ஏ...?"மென்று நேரு குறிப்பிட்டார்.

வேண்டுகோள்கள்

நெல்லை மாவட்டம்

நெல்லை மாவட்டத்திலுள்ள பல ஊர்களிலிருந்து தி. மு. க உறுப்பினர் சேர்க்கும் இரசீது, கணக்கற்ற தோழர்கள் கேட்ட வண்ணமாகவே இருக்கிறார்கள் மத்திய கழகத்திலிருந்து வரும் ... அனுப்பப்பட்ட புத்தகங்களை வரிசைக் கிரமமாக கிந்து அனுப்பி வருகிறேன். இனி மத்திய கழகத்திலிருந்து புத்தகம் வந்தவுடன் பக்கி ஊர்களுக்கு அனுப்புகிறேன். தாமதத்திற்கு மன்னிக்கவும். அத்துடன், கழகமே ஆரம்பிக்கப்படாத ஊர்களிலிருந்தும் ரசீது புத்தகம் கேட்டு எழுதியுள்ளார்கள். அத்தோழர்கள் உடன் கழகம் அமைக்க வேண்டுகிறேன். இன்றேல் ஒவ்வொரு உறுப்பினருக்கும் 4 அணா ஸ்டாம்பு அனுப்பி வைத்தால், உடன் உறுப்பினராகச் சேர்த்துக் கொண்டு அதற்குரிய இரசீதை அனுப்பி வைக்கிறேன்.

என்னிடமிருந்து இரசீது புத்தகம் பெற்றுக்கொண்ட தோழர்கள் அதிலுள்ள எண்ணுள்ள புத்தகம் பெற்றுக்கொண்டதாகக் கையொப்பத்துடன் ... காட்டுவது எழுதிவிடவேண்டுகிறேன்.

நமது மாவட்ட திராவிட முன்னேற்றக் கழகம் அமைக்க வேண்டியிருப்பதால் நெல்லை மாவட்டத்திலுள்ள ஊர்களில் அமைக்கப்பட்டிருக்கும் தி.மு. கழகங்கள், இரண்டு பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுத்து எனக்குத் தெரிவிக்கப் பணிவுடன் வேண்டுகிறேன்.

தங்கள்

கே. வி. கே. சாமி

அமைப்புக்குழு உறுப்பினன்

தி. மு. கழகம்

தூத்துக்குடி.

மதுரை

மத்திய கழக அங்கத்தினர் ரசீதுப் புத்தகம் பெறாதவை தோழர்கள் ரசீதுப் புத்தகங்களையும், சேர்க்கப்பட்ட அங்கத்தினர்களுக்குரிய சந்தாத் தொகையையும் ஒப்படைக்க வேண்டுமாய்க் கேட்டுக்கொள்வதோடு, மற்றும் நவம்பர் மாத இறுதிக்குள் நகரில் ஏராளமான அங்கத்தினர்களைச் சேர்த்துக் கொடுக்கும் முயற்சியில் உள்ள கழகங்களும், இப்பக்கத்து ஊர்களும் ஒத்துழைக்க வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

எம். அப்பாசாமி

செயலாளன்.

நகர தி. மு. கழகம்.

விருதுநகர்

விருதுநகரில் தி. மு. கழக அங்கத்தினர்களாகத் தங்களைப் பதிவு செய்து கொள்ளாத தோழர்கள் உடன் பதிவுசெய்து கொள்ள வேண்டுகிறேன் இராமநாதபுர மாவட்டத்தில் விருதுநகரைச் சிறந்த கோட்டையாக ஆக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மதுரை, ராமநாதபுரம், திருநெல்வேலி மாவட்டங்களில் இயக்க வேலைகள் கொஞ்சம் தீவிரமாக நடைபெறவேண்டியிருக்கின்றன. தமிழ்நாடு முழுமைக்கும் அக்டோபர் மாதம் முடிய சுமார் 275 தி. மு. கழகக் கிளைகள் தோன்றியிருக்கின்றன. இந்த நிலைப்படிப் பார்த்தால் பாண்டிய மண்டலத்தில் சுமார் 85 கழகங்களாவது தான் இருக்கவேண்டும். இதுவரையில் கணக்கில் காட்டியுள்ளபடி சுமார் 45 கழகங்களே அமைந்திருக்கின்றன. பொதுச் செயலாளர் தோழர் அண்ணாதுரை பாண்டிய மண்டலத்தில் சுற்றுப்பிரயாணம் செய்யவருவதற்குள் பாண்டிய மண்டலத்திலுள்ள நாம் சுமார் 150 கிளைக் கழகங்களை அமைத்துவிடவேண்டும். பாண்டிய மண்டலத்தில் 15000 அங்கத்தினர்களை உடனடியாக சேர்த்து முன்னணியில் நமது மண்டலத்தை நிறுத்திக்காட்ட வேண்டும். தி. மு. கழக ஆரம்பச் செலவுக்காக ரூ 10000/க்குக் குறையாமல் பொதுச் செயலாளரிடம் கொடுக்க நாம் முயற்சி எடுக்க வேண்டும்.

இத்தகைய செயல்களைப் பாண்டியமண்டலத்தில் செய்து முடிக்க விருதுநகர் ஒரு முன்னெடுத்துக்காட்டாக விளங்க வேண்டும். ஆகவே ஆக்கவேலைகளில் உடனடியாக ஈடுபடும்படி நகரத் தோழர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

தங்கள்

என். உத்தண்டன்,

விருதுநகர்.

தஞ்சை மாவட்டம்

நமது மாவட்டத்தில் திராவிட முன்னேற்றக் கழக அங்கத்தினர் சேர்க்கவும், புதுக்கழகம் அமைக்கவும், 20 கழகங்களுக்கு அவர்கள் கேட்டுக்கொண்டபடி அங்கத்தினர் ரசீது புத்தகம் அனுப்பி இருக்கிறேன். மேல்கொண்டு மாவட்டத்தில் கழக அமைப்பு ஏற்படுத்த விரும்பும் தோழர்கள் உடனே அங்கத்தினர் புத்தகம் பெற்று, கழகங்களைநிறுவி, ஆக்க வேலைகளை செய்ய முன்வருமாறு கேட்டுக்கொள்கிறேன். 1949—டிசம்பர் மாத இறுதிக்குள் மாவட்டம் பூராவும் திராவிட முன்னேற்றக் கழக நிறுவுதல் வேலை பூர்த்தியாகிவிடவேண்டும். அதனை முன்னிட்டுதான், கழக முக்கியஸ்தர்களுடன் மாவட்ட சுற்றுப்பிரயாணம் செய்து கழகப் பணிபுரிய வேண்டிய நிலைபற்றி கழகங்களுக்குத் திட்டமிட்டு விளக்கிவர முடிவுசெய்திருக்கிறபடியால் விரைவில் துவக்க ஆக்கவேலை செய்ய, முன்னேற்றக் கழக அமைப்பு வேலையை நடத்திவருவதற்கும், மத்திய கழகப் பொதுச் செயலாளருக்கும் கழகச் சம்பந்தமான பெயர், விலாசம், நிகழ்ச்சிகளை அனுப்பப் பதிவு செய்துகொள்ளுமபடி கேட்டுக்கொள்கிறேன்.

தங்கள்

கே. கே. நீலமேகம்,

தஞ்சை மாவட்ட

தி. மு. கழக அமைப்பாளர்

பஞ்சக்காரத் தெரு,

கும்பகோணம்.

Printed & Published by T. M. Parthasarathy at the Mercantile Press, 2/45, Muthumari Chetty Street, Madras-1.